

www.tamilarangam.net

# துளிர்



"இறந்த உடல்களுக்கும்,
அகதி முகாம்களிலே
குழந்தைகளின்
இடையறாத அழுகுரல்களுக்கும்
இடையே
எதைத் தான் எழுத?"

www.tamilarangam.net



தளிரின் வளர்ச்சிக்கு எமது வாழ்த்துக்க

நண்பரின் அன்பளிப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தளிர்

திரள்:- 3 இல:- 2

வைகாசி:- 1985

விலை ரூபா:- 4


## உள்ளே


* எங்கிருந்து தொடங்குவது?-
* அமைப்புக்களும், அரசியலும்
* தமிழீழப் போராட்டமும் சிங்கள மக்களும்
* தோட்டத் தொழிலாளரைப் பற்றிய பொய்மைகளும், உண்மைகளும்
* முல்லை மண்ணில் சில நாட்கள்
* தென்னாசிய சூழ்நிலையில் தமிழீழப் போராட்டமும் சோஷலிஸத்திற்கான பாதையும்
* புரட்சியில் இளைஞர்கள்
* எல்சல்வடோர்
* "கற்பு—கற்பிழப்பு—கற்பழிப்பு" சில குறிப்புக்கள்.


## தொடர்புகட்கு


"தளிர்"

ஆசிரியர் குழு

யாழ். பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம்.


## அட்டைப்படம்


நன்றி:-

TRANSNATIONAL PERSPECTIVES.


## வெளிநாட்டுப் பயணங்கள்

ஒரு நாட்டில் அடக்குமுறைகள் தீவிரமடையும் போது அமைதியான வாழ்வை விரும்பும் மக்கள் புலம் பெயர்வது இயல்பானதே. ஆட்சியாளரினதும் அவர்களினது கூலிப்படையினதும் அடக்குமுறைக்கும், சிங்கள பெருந்தேசிய இனவாதத்தின் ஒடுக்குமுறைக்கும் இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்கள் உள்ளாகின்றனர். காலம், காலமாக திட்டமிடப்பட்டு நடந்து முடிந்த இனக்கலவரங்கள் போன்ற ஒடுக்குமுறை நடவடிக்கைகளால் பாரம்பரிய தமிழ் பிரதேசங்கள் பாதுகாப்பான பிரதேசங்களாகத் தோற்றமளித்தன. இதனால் இப் பிரதேசங்களை நோக்கிப் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் 'சொந்த மண்" என நம்பி வந்த பிரதேசத்திலும் அரசியல் அடிமைத்தனத்தையே எதிர்நோக்க நேரிட்டது. ஆகவே "உயிரை மட்டும் வைத்திருக்க அனுமதியளிக்கும்" மேற்கு நாடுகளுக்குத் தப்பி ஓடிவிட நினைக்கின்றனர்.

இப்படித் "தப்பியோடி" தன்மானமிழந்து போவதற்கு தயாராகவுள்ளவர்கள் தம் கேவலமான முடிவுக்கு எக்காலத்திலும் சமாதானம் கூறிவிட முடியாது. இவர்களது குடும்பசுமை தமது தலைமேல் இருப்பதாகவும், போராட்டக் களத்தில் இறங்க தம்மால் முடியாது எனவும் வசதியான வழிகளில் சிந்திப்பதுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. விடுதலைக்காகப் போராடிவரும் இயக்கங்களுக்கிடையிலான பிளவைச் சுட்டிக்காட்டியும், இயக்கங்கள் விடும் தவறுகளை பெரிதுபடுத்துவதன் மூலமும் தமது அரசியற் சுயமைத்தனத்தையே வெளிப்படுத்துகிறார்கள்.

இவர்களுக்கு சில வார்த்தைகள் ........

உன் சகோதரர்கள், உன் குழந்தைகள் உன் இனத்துக்காகவே இந்த மண்ணில் வீழ்ந்து மடிகின்றார்கள். அவர்களின் குருதியினாலேயே இம் மண் சிவப்பாகின்றது. எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற வீரமரபுக்கிணங்க தம்மைத் தாமே அழித்துக்கொள்ளும் சகோதரர்களைப் பார்! களத்தில் எதிரியுடன் போராடி வீரமரணம் அடையும் உடன் பிறப்புக்களைப் பார்! உன்னைப் போல் வெளிநாடுகளுக்கு தப்பியோட முடியாமல் இங்கேயே வாழ்ந்து எதிரியின் குண்டுகளைத் தாங்கி மரணிக்கும் அந்த அப்பாவி மனிதர்களைப் பார்! ..... ஒரு கணம் சிந்தித்துப் பார்!

இவர்களின் தியாகத்திற்கு வெளிநாடு சென்று இயக்கத்திற்கு நீ அனுப்புகின்ற பணம் ஒருபோதும் ஈடாகாது. உன்னை உறுத்தும் மனச்சாட்சியுடன் சமரசம் செய்து கொள்ளவே "நீ பணத்தைத் தருகின்றாய்" என்றே விளங்கிக்கொள்ளப்படும். மேலும், உனது புலப்பெயர்வு எதிரிக்கு துணைபோகும் நடவடிக்கை என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

www.tamilarangam.net



## எம். எச். முகமதுவும் "மொஸாட் தொடர்புகளும்:-

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அண்மையில் இடம்பெற்ற தமிழ் — முஸ்லீம் மோதல்களுக்குப் பின்னணியில் இஸ்ரேலிய உளவுச் சேவையான மொஸாட் இருந்திருக்கிறது என்று முக்கியமான அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள். இந்த நாசவேலையின் பின்னணியில், ஆளும் இனவெறி சிறிலங்கா அரசின் முஸ்லீம் அமைச்சர்களுக்கும் முக்கியமான பங்கு உண்டு என்பது தெரிய வந்திருக்கிறது.

போக்குவரத்து அமைச்சர் எம்.எச். முகம்மதுவே இஸ்ரேலிய 'மொஸாட்'டுடன் ரகசியமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு தமிழ் - முஸ்லீம் மோதல்களுக்குப் பின்னணியாக இருந்துள்ளார்.

எம். எச். முகம்மது கொழும்பிலுள்ள லங்கா ஒபரோய் ஹோட்டலில் தை மாதம் 21 - ம் திகதி, ஒரு திங்கட்கிழமை 'மொஸாட்'டின் மிக முக்கியமான புள்ளியான அவ்ரஹாம் யோஃபி (Avraham-Xoffe) என்பவனைச் சந்தித்து இரகசியப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

கிழக்கில் தமிழ்-முஸ்லீம் மோதல்கள் வெடிப்பதற்கு முன்பாகவும், கொள்ளுப்பிட்டியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இருக்கும் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவிற்கு பல தடவைகள் சென்று ஆலோசனை பெற்றுள்ளார்.

அக்கரைப்பற்றில் கொள்ளைகளுக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும் அரசு சார்பில் இவர்களே ஏற்பாடு செய்தது மட்டுமல்லாமல், ரூபவாஹினி படப்பிடிப்புக் குழுவையும் முதல் நாளே அனுப்பி வைத்து விட்டார்கள்.

முகம்மதுவின் இந்த இஸ்லாமிய-விரோத நடவடிக்கைகளையிட்டு இஸ்லாமிய மக்களை விழிப்பாக இருக்குமாறு வேண்டுகிறோம். 'மொஸாட்'டைப் பொறுத்தவரை சர்வதேச ரீதியில் அதனுடைய குறிக்கோள் ''பிரித்து ஆள்; இஸ்லாமியனை அழி!'' என்பது அனைவருக்கும் தெரிந்தது.

இங்கிலாந்திலுள்ள இஸ்லாமியப் புரட்சி இயக்கம் மொஸாட்டினது சிறிலங்காத் தொடர்புகளையும், மொஸாட் எவ்வாறு இஸ்லாமிய மக்களை அழிக்க உதவுகிறது என்பதையும் பற்றி விரிவாக பிரச்சாரம் செய்து வருகிறது.

சிறிலங்கா அரசைப் பொறுத்தவரை, அது தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒழிக்க பேயுடனும்கூட்டுச்சேரத் தயார் என்பது மட்டுமல்ல பிசாசுடன் (இஸ்ரேல்) கூட்டுச் சேர்ந்துள்ளது. ஆனல் பேய்களும், பிசாசுகளும் கூட ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முறியடிக்க முடியாதென்பதை காலம் உணர்த்தும்.

☐ ☐ ☐

## ஒரே பார்வையில் "தார்மீகம்"

### 1984

| திகதி | | இடம் | கொல்லப்பட்டவர் தொகை |
|---|---|---|---|
| மாசி | 25 | குருநகர், யாழ்ப்பாணம் | 01 |
| பங். | 28 | சுன்னகம், யாழ்ப்பாணம் | 10 |
| சித். | 09, 10 & 11 | யாழ்ப்பாணம் | 51 |
| | 22 | கடற்பிரதேசம், -மயிலிட்டி, யாழ்ப்பாணம் | 11 |
| ஆவ. | 05 | யாழ்ப்பாணம் | 18 |
| | 05 | வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம் | 05 |
| | 06 | வவுனியா | 06 |
| | 07 | மன்னூர் வீதி, வவுனியா | 16 |

(தொடர்ச்சி 4 பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எங்கிருந்து தொடங்குவது?

அருச்சுனா

'எங்கிருந்து தொடங்குவது?' என்ற தலைப்பில் லெனின் ஒரு முக்கியமான நூல் ஒன்றை எழுதியுள்ளார். அதே தலைப்பில் நமது விடுதலை இயக்கங்களைப் பற்றிய சில அவதானங்களைப் பதிவு செய்து கொள்வது நல்லது.

சரி, 'எங்கிருந்து தொடங்குவது'; நம்பிக்கையிலிருந்தா? அல்லது விசாரணையிலிருந்தா? நாங்கள் எந்த விஷயத்தையும் தொடங்குகிறோம் என்பதில் தான் நமது விஞ்ஞான பூர்வமான அணுகுமுறை தங்கியிருக்கிறது. வெறும் நம்பிக்கைகளிலிருந்தே தொடங்கி வளர்ந்து பரவியது மதம் ஆகும். எவ்விதமான கேள்விகளுக்கும், விசாரணைகளுக்கும் இடமின்றி எம்மதத்தவனுகப் பிறந்தானே அல்லது வளர்க்கப்பட்டானே, அம்மதத்தை நம்புவது; கண்மூடித்தனமாக நம்புவது; இத்தகைய ஒற்றைப் பரிமாணம் கொண்ட நம்பிக்கையிலிருந்து தொடங்கும் போக்கு, பிறகு தனது நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும், நம்பிக்கையை நம்புவதற்கும் சில நியாயங்களை சில வரம்புகளுக்குட்பட்டு விசாரணை செய்து கொள்ளும். இது நம்பிக்கையில் தொடங்கி நம்பிக்கையிலேயே முடிவடைந்து விடும் ஒரு மூடுண்ட, வளர்ச்சி குன்றிய ஒரு எதிர் - இயங்கியல் போக்காகும்.

அடுத்த போக்கு, விசாரணையிலிருந்து தொடங்குவது! எதனையும் கண்மூடித்தனமாக நம்பாது; கேள்விகள் எழுப்பும்; விவரங்களை, சான்றுகளை, ஆதாரங்களைத் துருவும்; மறுபடி துருவும்; காரணங்களை ஆராய்வு செய்யும். இவற்றிலிருந்து முடிவுகளைப் பெறும். பிறகுதான் நம்பிக்கை கொள்கிறது. அதன்பிறகும் தொடர்ச்சியாக கேள்விகள்-விசாரணைகள் - அனைத்தும் திருப்தியெனில் நம்பிக்கை, திருப்தியில்லை எனில் கலகம் செய்யும்; உரத்த குரலில் காரணங்களை வினவும். இத்தகைய போக்கே உண்மையில் ஆரோக்கியமானதாகவும் விஞ்ஞான பூர்வமாகவும் அமையும். இந்த ஆரோக்கியமான போக்கு — 'எல்லாத் தமிழர்களும் புத்திசாலிகள்; எல்லாச் சிங்களவர்களும் காட்டுமிராண்டிகள்; எல்லா முஸ்லீம்களும் சந்தர்ப்பவாதிகள்' — என்று வரைவிலக்கணம் செய்யும் மோசமான திசைவிலகல்களை எதிர்த்துப் போராடும்; சமுதாயத்தை முன்னேக்கிய பாச்சல்களுக்கு இட்டுச் செல்வதற்குத் தடையாக இருக்கும் எதனையும் இப்போக்கு எதிர்க்கும்.

நமது விடுதலை இயக்கங்கள் மேற்கூறிய போக்குகளில் எதனைப் பெருமளவிற்குப் பின்பற்றுவது அதிக பலனைத்தரும்? இது ஒரு முக்கியமான கேள்வி. ஏனெனில் இக்கேள்விக்கு நாம் பெறப்போகிற விடைதான் நமது போராட்டத்தின் நிச்சயமான வெற்றியை உத்தரவாதம் செய்வதாக அமையும்.

எண்ணிக்கையில் அதிகளவு விடுதலை இயக்கங்கள் இங்கு இருக்கின்றன. அவற்றுள் நான்கு அமைப்புக்களுக்கிடையில் பரஸ்பரம் குறைந்தபட்ச அரசியல், ராணுவ, ஸ்தாபனப் புரிந்துகொள்ளல்களாவது எதிர்காலத்தில் ஏற்படும் என நம்பக்கூடியதாக இருக்கின்றது. இந்த நான்கைத் தவிர மற்றைய அமைப்புக்களுடனும் புரிந்துணர்வும் பரஸ்பர அங்கீகாரமும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் 1979 ற்கு முந்தி நிக்கரகுவாவில் 14 இயக்கங்களும், எல்சல்வடோரில் பல இயக்கங்களும் விடுதலைக்காக போரிட்டது உண்மையே. ஆனால் எல்சல்வடோரில் எல்லா இயக்கங்களும். FMLN எனும் பெயரின் கீழ் ஐக்கிய முன்னணியமைத்துள்ளன. நிக்கரகுவாவிலும் சன்டினிஸ்டுகளின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட ஐக்கிய முன்னணியே வெற்றியை சாத்தியமாக்கியுள்ளது. இங்கும் கூட எதிர்காலத்தில் எல்லா இயக்கங்களுக்கிடையிலும் புரிந்துணர்வும் ஐக்கியமும் ஏற்பட வேண்டிய தேவையை இதுசுட்டி நிற்கின்றது. நமது சூழலில் அனைத்து இயக்கங்களுக்கிடையிலான ஐக்கிய முன்னணி இன்னும் சாத்தியமாகவில்லை என்பதற்கு நாம் முன்பு கூறிய போக்குகளில் முதலாவது போக்கான 'நம்பிக்கையிலிருந்து தொடங்குவது' என்பது விடுதலை இயக்கங்களுக்கு உள்ளே பலமாக இருப்பதும் காரணமாக இருக்கலாம். ஒவ்வொரு விடுதலை அமைப்பையும் சார்ந்தவர்கள் தாம், தாம் சார்ந்துள்ள அமைப்பையே உன்னதமாகவும், அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்க்கும் ஆயுதமாகவும் நம்பக்கூடும். கடந்த காலங்களில் தங்கள் அமைப்பால் மட்டுமே விடுதலையை வென்றெடுக்கமுடியும் என்றுநம்பியவர்கள் பலர் இன்று உண்மை நிலையை உணர்ந்துள்ளதை காணக்கூடியதாகஉள்ளது. மற்றைய அமைப்புக்களைச் சார்ந்தவர்களைப் பற்றிக் கொண்டிருந்த கொச்சைத்தனமான அபிப்பிராயங்களையும், விமர்சனங்களையும், இன்றுபலர் மாற்றியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் அமைப்புகளுக்கிடையில் நேச உணர்வுகள் பலமடைய இது உதவும். இரு வேறு வேறு அமைப்புக்களைச் சார்ந்த ஒரே இலட்சியத்தைக் கொண்ட போராளிகள் எதிரெதிராகச் சந்தித்தால் நட்புரீதியான சிறுபுன்னகை, பரஸ்பர உரையாடல், நட்பு நிலமைகள் பற்றிய சிறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதைப்புகள் என்பவற்றை மேலும் வளர்த்துக் கொள்ளல் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த உதவும்.

இந்நிலையில் இயக்கங்களுக்கிடையில் தோன்றும் பிரச்சனைகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும். பிரச்சனைகளை ஆயுதமுனையில் அணுகும்முறை நிலைமையை மேலும் சிக்கலாக்கும் என்றே நம்புகின்றோம்.

எல்லா அமைப்புக்களின் எல்லாமட்டங்களிலும் தங்களை முற்றுமுழுதாக இவ்விடுதலைப் போராட்டத்திற்கு அர்ப்பணித்த, உண்மைத் தோழர்கள், மிகுந்த ஈடுபாட்டுடனும், மனப்பூர்வமாகவும் வேலைசெய்து வருகின்றார்கள் என்பதை சகல அமைப்புக்களும் எந்த நேரமாவது மறந்துவிட முடியாது. மற்ற அமைப்பைச் சார்ந்தவனை பிரதானமாக எப்போதும் ஒருபொது இலட்சியத்திற்காக உழைத்துக் கொண்டிருக்கும் போராளி என்ற தளத்தில் பார்க்க வேண்டும். (மற்ற அமைப்பைச் சார்ந்தவனை உடனடியாக அமைப்பு முத்திரை குத்திப் பார்க்காமல், ஒரு போராளி என்ற ரீதியில் நட்புடன் அணுகுவோம்.)

அமைப்புகளுக்கிடையேயான முரண்பாடுகளையும் கருத்து மோதல்களையும் பேசித் தீர்ப்பதற்கு எல்லா அமைப்புகளும் ஒன்றிணைந்து கலந்து கொள்ளக் கூடிய ஒரு 'முறைமை'யை (System) உருவாக்குதல் நல்லது. கிராம மட்டங்கள், பிரதேச மட்டங்களில் அமைப்புக்களுக்கிடையில் உறவுகளை, உரையாடல்களை தாராளமாக அனுமதிப்போம்; பத்திரிகைகளையும், பிரசுரங்களையும் பரிமாறுவோம். மக்களுடைய பிரச்சனைகளுக்கு கிராமிய மட்டத்திலாவது 'ஒன்றிணைந்து' முகங்கொடுக்க முயற்சிப்போம்!

குறுகிய பிரிவுசார்ந்த போக்குகளையும், கண்ணோட்டங்களையும் (Sectarian outlook) கொண்டிருப்பவர்கள் அவற்றை தவிர்த்துக்கொள்ள முயற்சிப்போம். அமைப்புக்களில் நம்பிக்கை வைத்திருப்பது எவ்வளவு அவசியமானதோ அதேயளவு அவசியமானது எப்போதும் கேள்விஎழுப்புவதும், விசாரணைகளிலிருந்து தொடங்குவதும் ஆகும் என்பதையும் புரிந்து கொள்ளுவோம்.

எங்கிருந்து தொடங்குவது என்றால், இவற்றிலிருந்துதான் தொடங்குவோம்! தொடர்வோம்!! நிச்சயமாக ஒரு வெற்றியை அடையப்போகிறோம் என்றால் இன்னும் கொஞ்சக்காலம் துன்பப்படுவதில் பரவாயில்லை அல்லவா? ✻

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி) ஒரே பார்வையில் ......

| | | | |
|---|---|---|---|
| | 11 | சுன்னாகம், யாழ்ப்பாணம் | 15 |
| | 11 } 12 } | மன்னார், மாந்தை, அடம்பன், - மன்னார் மாவட்டம் | 09 |
| | 13 | கைதடி, யாழ்ப்பாணம் | 09 |
| | 31 | பருத்தித்துறை, யாழ்ப்பாணம் | 06 |
| புரட். | 05 | மல்லாவி, முல்லைத்தீவு | 05 |
| | 11 | வவுனியா, மன்னார் வீதி | 16 |
| | 16 | கரணவாய், யாழ்ப்பாணம் | 01 |
| கார். | 01 | ஊரெழு, உரும்பிராய், யாழ்ப்பாணம் | 05 |
| | 02 | வளலாய், யாழ்ப்பாணம் | 01 |
| | 06 | உரும்பிராய், யாழ்ப்பாணம் | 02 |
| | 06 | நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம் | 01 |
| | 09 | யாழ்ப்பாணம் | 08 |
| | 13 | புளியங்குளம், வவுனியா | 03 |
| | 18 | கட்டப்பிராய், யாழ்ப்பாணம் | 06 |
| | 19 | அடம்பன், மன்னார் | 04 |
| | 20 | சாவகச்சேரி, யாழ்ப்பாணம் | 05 |
| | 21 | அநுராதபுரம் | 02 |
| | 30 | முல்லைத்தீவு | 50 |
| மார். | 02 | ஒதியமலை, முல்லைத்தீவு | 32 |
| | 02 | இராணுவ முகாம், வவுனியா | 121 |
| | 04 | முருங்கன், பரப்பாங்கண்டல் உயிலங்குளம், மன்னார் மாவட்டம் | 107 |
| | 08 | கோவில்க்குளம், ஆசிக்குளம் மருதங்குளம், கச்சான்குளம், வவுனியா மாவட்டம் | 20 |
| | | **1985** | |
| வை. | 08 | வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம் | 72 |
| | 15 | குறிகட்டுவான் - நயினாதீவு கடற் - பிரதேசத்துள் | 41 |
| | 17 & 18 | கல்முனை, பட்டக்களப்பு | 69 |
| | — | மூதூர், திருமலை | 116 |

(இவை எம்மால் திரட்ட முடிந்த தரவுகள் மட்டுமே.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமைப்புக்களும் அரசியலும்

-- என். நாகராசன்

"விதை ஒன்று போடச் சுரை ஒன்று முளைக்குமோ!"

சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்!"

நாம் எண்ணியதை, விரும்பியதைச் செய்து முடிக்கவோ அல்லது குறைந்த அளவு செய்யவோ கூட இயலாமல் பல தடைகள் ஏற்பட்டால் அங்கெல்லாம் நாம் சுதந்திரமாகச் செயல்பட இயலவில்லை என எண்ணுகிறோம் - நொந்து கொள்கிறோம். அதே போல சீரிய சிந்தனைக்கும் தடைகள் ஏற்படலாம். முறையாகச் சிந்திக்க வகையின்றி தவறான கருத்துக்கள் நம் சிந்தனையைத் தடை செய்யலாம். இது நமக்கே புரியாமலுமிருக்கலாம். இதன் விளைவாக உண்மையைக் காணவும் சரியாகச் செயல்படவும் முடியாமல் போகும். இத்தகைய எண்ணத் தடைகளை மூடநம்பிக்கைகள் எனக் கூறுகிறோம். சிந்தனை எப்படியோ அங்ஙனமே செயலும். இதையே அகக் காரணங்கள் என்றும் புறக் காரணங்கள் என்றும் அத்தடைகளை அகத்தடைகள், புறத்தடைகள் என்றும் கூறுகின்றோம்.

ஒருவனே ஒரு காரியத்தைச் செய்கையில் அதில் ஓரளவு விளைவைக் காணலாம். அதில் இருவர் இணைந்து செயல்பட்டால் அதன் விளைவு இருமடங்குக்கும் அதிகமாகலாம். மாறாகக் குறையவும் செய்யலாம். ஒருவர்க்கு ஒருவர் பயனுள்ள வகையில் ஊக்கமும் உதவியும் அளிக்கும் வகையில் செயல்பட்டால் இருவரும் தனித்தனியே செய்யும் பணியின் மொத்த அளவைக் காட்டிலும் கூடுதலாகவே செய்யமுடியும் என்பதைப் பட்டறிவு நமக்கு எடுத்துக் காட்டும். மாறாக ஒருவருக்கு மற்றவர் உட்பகை கொண்டாராகில், ஒருவன் செயலுக்கு மற்றவன் குந்தகம் விளைவிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டால், ஒருவன் மற்றவனைக் குறை கூறுவதையும், பழிப்பதையுமே தொழிலாகக் கொண்டால், அதாவது ஒருவன் செயலுக்கு மற்றவன் முரணாகவே செயல்பட்டால் இச் சேர்க்கை அல்லது இணைப்பு பயனற்றது. இங்கு இருவரும் சேர்ந்து ஒருவன் தனியாகச் செய்யக்கூடிய அளவுகூடச் செய்ய இயலது. அப்படிச் செய்யக்கூடிய அளவுகூடச் செய்ய இயலாது. அப்படிச் செய்யக்கூடிய செயலும் குறைவுள்ளதாகவே அமையும்.

பலர் ஒரு அமைப்பாகக்கூடி அல்லது அமைப்பை உருவாக்கித் திட்டமிட்டு வேலையைப் பகிர்ந்து கொண்டு, ஒருவர் பணி மற்றவர் பணிக்கு உதவும் வகையில் செயல்படுவது தான் பெரும்பணியை வெற்றிகரமாகச் செய்ய வகை செய்யும். இங்ஙனம் செயல்படும்போதுதான் ஒவ்வொருவரும் தனித்தனியே செய்யும் பணியைக் காட்டிலும் பன்மடங்கு கூடுதலாகவே செய்ய இயலும். இத்தகைய கூட்டே, இணைப்பே செயலுக்கும் அமைப்புக்கும் நியாயம் வழங்குவதாக அமைகின்றது. இல்லையேல் அத்தகைய அமைப்புகளுக்குத் தேவை இல்லை. மேற்கூறியவாறு செயல்பட்டாலே இங்கு ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் (செயலில் சுதந்திரம்) இருப்பதாகக் கருதலாம்.

இத்தகைய கூட்டமைப்பு புறக்கட்டாயத்தாலோ, தூண்டுதலாலோ, காசு பண ஆசையினாலோ விளையாது. இங்கு இயங்கும் ஒவ்வொருவரும் அவரவர் மனமுவந்து, விரும்பி இணைந்து செயல்பட முடியும். இத்தகைய அமைப்பு அல்லது இணைப்பு ஒருவகையான கூட்டு வாழ்வன்றோ? இத்தகைய கூட்டு வாழ்வின் அங்கமாகச் செயல்படுபவர்கள் மிகவும் மனநிறைவுடனும், மகிழ்ச்சியுடனும், ஆர்வத்துடனும் செயல்படுவர். அப்படிச் செயல்படுவது தான் இத்தகைய அமைப்பின் அடிப்படை அளவை; அங்ஙனமில்லையெனில், இவ்வமைப்புக்கள் தேவையற்றவை.

அமைப்புக்கள் இருகாரணங்களால் திறம்படச் செயல்பட இயலாது போகலாம்; முதல்காரணம் அமைப்பினுள் இணைந்துள்ளவர்களின் மனப்போக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தின் காரணமாக இருக்கலாம். இங்கு ஒருவர் மற்றவரைத் தனது குறுகிய நலனுக்கு பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி இருக்கலாம். இத்தகைய கூட்டம் தன்னலக்காரக் கூட்டம். இங்கு நல்லவர்கள் தொடர்ந்து பணி செய்ய இயலாது. இரண்டாவது காரணம் வேறு வகைப்பட்டது. இங்கு அனைவரும் நல்ல எண்ணத்துடன் இருந்தாலும் பணியைச் சரியாகப் பகிர்ந்து கொள்ளத் தெரியாமல் போகலாம். மற்றும் ஒருவரின் பணி மற்றவர் பணிக்கு உதவும் வகையில் திட்டமிடாமல் இருக்கலாம்; அல்லது செய்ய இயலாத பணியை மேற்கொள்ளலாம். இவை அனைத்தும் அறியாமையின் காரணமாகத் தோன்றும் விளைவே. ஆயினும் இக்குறையைக் காலப்போக்கில் சரி செய்யலாம். முதல் குறையைச் சரிசெய்யவே இயலாது. நல்ல எண்ணம் நல்ல செயலுக்கு அடிப்படை, இதற்கு விதிவிலக்கே கிடையாது. முதல் கோணல் முற்றிலும் கோணல்.

பொதுவுடைமைக் கட்சி ஒரு சுதந்திரமான அமைப்பே. இதன் அங்கமாகச் செயல்படும் எவரும் புற உந்துதலின் காரணமாக இணைந்திருக்க முடியாது. இங்கு நிலவ வேண்டிய உறவு சுதந்திர உறவின் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டதாகத்தான் இருக்க முடியும். தனி மனிதர்கள் எங்ஙனமோ அப்படித்தான் ஒரு கட்சியின் உள் அமைப்புக்களும். ஒவ்வொரு குழுவிற்குமிடையே காணும், நிலவும், விளையும், உறவும் அத்தகையதாகவே இருக்கும். இத்தகைய உறவு தான் அகிலத்தின் (பல பொதுவுடைமைக் கட்சிகளின் கூட்டமைப்பு) தன்மையாகவும் இருந்தாக வேண்டும். இத்தகைய உறவு அழிக்கப்பட்டால் கட்சியால் புரட்சிகரமான, மிகக் கடினமான, மிகப் பெரும் பணியைச் செய்யவே இயலாது. இத்தகைய உறவுகள் இல்லாததால் தான் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்) போன்ற கட்சிகள் புரட்சிகரப் பணியைச் செய்யக்கூடிய அமைப்புக்கள் அல்ல என்று உறுதியாகவும், தெளிவாகவும் கூறமுடியும். மேலும் இவை அந்த நிலையை மாற்றி அமைக்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவுமில்லை. அதற்குக் காரணம் முன்கூறிய முதல் காரணமே.

உணர்ந்து ஏற்றுக்கொண்ட பெரும் லட்சியத்தைச் செயல்படுத்த இங்ஙனம் இணைந்து செயற்பட்டாலன்றி இயலாது எனத் தெளிவாக உணர்ந்தவர்களே இங்ஙனம் அமைப்பாகச் செயல்படுவர். இவ்வமைப்பில் ஒவ்வொருவரும் (அதே போல ஒவ்வொரு குழுவும்) பலரின் மனமுவந்த உதவியைப் பெறுவதால் (அதே போலப் பல குழுக்களின் உதவியைப் பெறுவதால்) மிகப் பெரும் பணியைச் செய்ய இயலுகின்றது. புரட்சி அத்தகைய பெரும் பணிதானே? இவ்வுண்மையை உணர்ந்தவர்கள் அமைப்புக்களை உடைப்பதையும் இழிவுபடுத்துவதையும் எளிதில் ஏற்க மாட்டார்கள். இலட்சியத்தில் அக்கறையற்றவர்களே மிக எளிதில் அமைப்புகளைச் சிதைக்கவும், உடைக்கவும் இழிவுபடுத்தவும் முன்வருவார்கள். இவர்கள் பொறுப்பற்றவர்கள். ஓர் அமைப்பு உண்மையான செயல்பாட்டுக்கு முற்றிலும் குந்தகம் விளைவிக்கக் கூடியது. (எடுத்துக்காட்டாக புரட்டலியப் போக்கு மிகுந்த நிலை) என்ற நிலை வந்தாலன்றி, அதாவது நல்ல செயலுக்கு அதிலுள்ள பலர் வேண்டுமென்றே ஏதோ காரணங்களைக்கூறி குறுக்கே வந்தாலன்றி, செயலைச் சீர்குலைக்கும் வேலைகளைச் செய்தாலன்றி, அவ்வமைப்பை உடைப்பதோ, கலைப்பதோ, இழிவு செய்வதோ கூடாது. அங்ஙனம் செய்வது விவேகமற்றது. அமைப்பைச் சரி செய்ய வகையில்லாமல் போனாலன்றி அமைப்பை உடைக்கக்கூடாது. அவசர புத்திக்காரர்களே எடுத்த காரணத்துக்கெல்லாம் அமைப்பைஉடைக்கக்கூறுவார்கள், இத்தகைய விவேகமற்ற போக்கு இன்னும் மறையவில்லை என்பதை நாம் காண்பது இன்றியமையாதது. போராட்டம் தான் நிலையானது (Struggle is absolute) என்னும் இயங்கியலின் கோட்பாட்டைச் சரியாகப் புரிந்து கொள்ளாது, போராட்டம் என்ற சொல்லுக்கு பதிலாக பிளவுதான் நிலையானது—பிளந்து கொண்டே போவதுதான் புரட்சி இயக்கத்தின் அடையாளம் என்றும் ஒற்றுமை தற்காலிகமானதே (Unity is relative)- என்றும் கூறிச் சிலர் உட்பூசல்களைக் கிளப்பி அமைப்புக்களை உடைத்தனர். அந்த நிலை இன்றும் மறையவில்லை. முரண்பாடு என்பது பிளவல்ல, ஒன்றுக்கொன்று இணைய இயலாத; ஒன்றை ஒன்று முற்றிலும் மறுக்கும், பகை முரண்பாடுகள் கொண்டதாக (Antagonistic Contradictions) இருந்தாலன்றி ஓர் அமைப்பு உடையக் காரணமில்லை. எடுத்துக்காட்டாக, புரட்டலியமும் புரட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிக் கொள்கையும் ஒரே அமைப்பில் இயங்க முடியாது. அதாவது தன்னலக் கும்பலும், பிறர் நலம் பாராட்டுபவரும் ஒரே அமைப்பினுள் இணைந்து செயல்பட முடியாது. அந்த நிலையில் தான் ஓர் அமைப்பு உடைபட நியாயமிருக்கின்றது மாறாக அறியாமையின் காரணமாகச் செயலில் மந்தமும், தேக்கமும் ஏற்படின் அமைப்பு உடைய வேண்டியதே இல்லை. அதாவது ஓர் அமைப்பு உண்மையாகச் செயல்படுவதற்கு முற்றிலும் குந்தகம் விளைவிக்க கூடியது என்ற நிலை ஏற்பட்டாலன்றி, பலருடைய நல்ல செயலையும் அது குறுகிக் குலைத்தாலன்றி அமைப்பை உடைப்பது முற்றிலும் அறிவற்ற செயல்.

தவறான நடைமுறைகளோ, அணுகும்முறைகளோ, மற்றும் நமக்குள்ளே தோன்றும் தவறான (ஏதோ ஒரு வகை அகந்தையின் காரணமாக) மனப்போக்குகளோ முழுமையான நேர்மையான செயலுக்குக் குந்தகம் விளைவிக்கலாம். இந்நிலையில் உள்ஆய்வு (தன்னாய்வும் செய்யும் பக்குவம் நம்மிடையே இருக்குமாயின் (தன்னாய்வே உண்மையான பக்குவத்தைக் கொடுக்கும்) இக்குறை நீக்கி, அல்லது நீங்கி மீண்டும் புத்துணர்ச்சியுடன் விரிவான பணியைச் செய்ய இயலும். இப்பக்குவம் (தன்னாய்வு செய்து கொள்ள இயலாமை இப்பக்குவத்தை அடைய வழி செய்யாது) இல்லை என்பதன் அடிப்படை என்ன? பொதுவாகத் தன் குறையை ஏற்கவோ, ஒப்பவோ, தானே எடுத்துக் கூறவோ, பின் அதனை நீக்கவோ மனமில்லாத போக்கு நம்மிடையே வெகுவாகப் பரவுமானால் அந்நிலையில் அந்த அமைப்பு பயனற்றுப் பொருளற்று மாறிவிட்டது என்றே கூறவேண்டும். இனி இதிலிருந்து செயல்படுவது பயனளிக்காது என்ற நிலையில் அதனை உடைக்கவோ அல்லது அதிலிருந்து வெளியேறி புதியதொரு அமைப்பை உருவாக்கவோ செய்யலாம்.

அமைப்பு நெறிகளின் உட்பொருள் என்ன? உண்மையான சுதந்திரச் செயலுக்கு வழிவகுக்கும் முறைகளே இவை. இவையே சுதந்திரத்தின் இலக்கணத்தின் சாட்சிகள்; வெறும் சடங்குகளல்ல: உள் அமைப்பு (கட்சி) ஜனநாயக விதிகள் என்பவை யாவை? அவற்றை ஏன் நாம் பேணிக்காக்க வேண்டும் என்பதையும் அவற்றைஉள்ளத் தூய்மையுடன் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் நாம் உணர்ந்தாகவேண்டும். அளவு மாறுபாடு தன்மை மாறுபாட்டை உருவாக்கும். ஐந்து பேர் தனித்தனியாகச் செயல்பட்டால் எந்தஅளவு இயலுமோ அதனைவிட அதிகமாகவோ,குறைவாகவோ (இரண்டும் தன்மை மாறுபாடுதான்) கூட்டாகச் செய்தால் விளையலாம்.

ஒவ்வொருவருக்கும் மனக்குறைகள் ஏற்படக் காரணம் இருக்கக்கூடும்: மற்றவரின் செயலில் குறைகாணலாம். ஆயினும் அவற்றை வெளியிட இயலாமல் இருக்கலாம். உள்ளே புகைந்து கொண்டுள்ள, அமுக்கி வைத்துள்ள வேகத்தை. சினத்தை வேதனையை (இதுவே ஆர்வமுள்ள செயலுக்கு முதற்பெருந் தடையாக இருக்கும்) வெளிக்கிளப்பி அதனை ஆக்கச் சக்தியாக மாற்ற வழிசெய்வதே ஆய்வும் தன்னாய்வும் ஆகும்; ஆயின் இவ்வழியும் பயன்பெறுவதற்கு பக்குவமான வழி வேண்டும். பிறர் குற்றத்தை எடுத்துக்கூறும்போது நெறியும் பக்குவமும் முறையாக இருத்தல் இன்றியமையாதது. தாறுமாறாகவும், சுடச்சுடவும், கிண்டலாகவும் பழிக்கும், அழிக்கும் நோக்குடன் திறனாய்வு செய்யப்படுமானால் எதிர்பார்த்த விளைவுக்கு நேர்மாறான விளைவே ஏற்படும். அதனால் தான் உட்கட்சிப் போராட்டத்தை (மக்களிடையே தோன்றும் முரண்பாடு) நடத்தும் போது தோழமை உணர்வு மிகவும் தேவை. இவ்வுணர்வு குறைந்தாலோ, மறைந்தாலோ திறனாய்வு தடம்புரண்டு இணைவதற்கு மாறாகப் பெரும் உட்பூசல்களும் இறுதியில் பிளவும் ஏற்பட்டு இயக்கத்துக்குப் பெருஞ் சேதம் ஏற்படும். இயக்கம் மக்களின் நம்பிக்கையை இழக்கும்.

அதிகார அமைப்பைப் போல் (Bureaucracy) அன்றி இந்த அமைப்பு சுதந்திரமான, ஒவ்வொருவரும் விரும்பி விளைந்த அமைப்பாக இருக்கவேண்டும். இவ்விருவகை அமைப்பிற்கும் இடையே காணும் வேறுபாடு மிகப்பெரியது உருவத்தால் மட்டுமே இரண்டும் ஒன்று போல் காட்சி தரும். ஆனால் ஒன்றை இயக்கும் சக்தி மற்றதை இயக்காது - மாறாக அழிக்கும். முன்னது அடிமை மனப்போக்கையும், உறுப்பினரிடையே வெறுப்பையும் சக ஊழியர்கள் மீதும் மேல் மட்டத்தில் இருப்பவர்கள் மீதும் சலிப்பையும் பொறாமையையுமே ஏற்படுத்தும். இத்தகைய அமைப்பினுள் பணியாற்றுபவர்களுக்கு ஆற்றல் குன்றியே தீரும். இது இறுதியில் அழிவையே தோற்றுவிக்கும். இதற்குள் நிலவும் உறவு, இது அன்னியமான உறவு. சுதந்திர உறவு என்பது அன்னியோன்ய உறவின் மறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெயர். அன்னியமான ஒருவரை ஒருவர் வெறுக்கும், பழிக்கும், அழிக்கும் உறவு கொண்ட அமைப்புகள் கேவலம் வயிறு வளர்க்கவே உதவும். இவை விரும்பிச் சுவைக்கும் இணைப்பல்ல; அமைப்பல்ல. புரட்சிகர அமைப்புகள் இங்ஙனம் இருக்கவே முடியாது. இந்த அடிப்படையிலிருந்து தான் இன்றைய சோவியத் யூனியனிலுள்ள கட்சி அமைப்புகளையும் புரட்டல் கட்சி அமைப்புகளையும் புரட்சியாளர்கள் திறனாய்வு செய்கின்றனர்.

முன்பு கூறியது போல சுதந்திரமான, விரும்பி மன முவந்து இணைந்து செயல்படும் அமைப்புகளில் காணும், கடைப்பிடிக்கும் நியதிகள் சுதந்திரமான உறவின் இலக்கணத்தைக் (இவையே இயங்கியலின் இலக்கணம்) கொண்டவை. ‘ஆகவே இவ்வமைப்புகள் வளர்ச்சிப் போக்கில் இவற்றில் செயல்படும் ஊழியர்களின் தரத்தையும் நற்பண்புகளையும் வளர்க்கும். அவ்வாறே இவ்வமைப்புகளின் செயல்களின் தரமும் அளவும் பெருகும். இங்ஙனம் வளர்வதே இவ்வமைப்புகளின் தன்மையை அளக்க உதவும் அளவுகோல்.

அடுத்து இத்தகைய சுதந்திரமான புரட்சிகரமான அமைப்புக்களை எங்ஙனம் மதிப்பிட வேண்டும்? சமுதாயத்துக்குள் இவை ஆற்றும் பங்கென்ன? புறச்சூழலுக்கும் இவற்றுக்குமிடையே காணும், நிலவும், விளையும் வேறுபாடு எத்தகையது? இவ்வமைப்புகளுக்குள்ளே நிலவும், விளையும், உறவும், பண்பும் மிகவும் உயிரோட்டமுள்ள சக்தியையும் ஆற்றலையும் வளர்க்கும். இப்பண்புகள் புறச்சூழலிலும் அதாவது சமுதாயத்துள்ளும் அழிந்தும் குறைந்தும் வருவதை நாம் காணாமலிருக்கமுடியாது. இதற்குக் குடும்ப அமைப்பும் விதிவிலக்கல்ல. இந்த நிலையில் சுதந்திரமற்ற அன்னியமான உறவுகள் சமுதாயத்துள் பரவி வரும் வேளையில் அன்னியோன்யமான உறவின் அடிப்படை கொண்ட இத்தகைய புரட்சிகர அமைப்புகள் சமுதாயத்துள் தோன்றி அச்சமுதாயம் தழைக்கவும் அதனை அடுத்த உயர்மட்டத்துக்கு எடுத்துச் செல்லவும் உதவும். இத்தகைய உயிர்த்துடிப்புள்ள அமைப்புகள் தோன்றவில்லையாயின் அச்சமுதாயம் காலப்போக்கில் அழிந்துவிடும். இதுவே வரலாற்றில் பல சமுதாயங்கள் வீழ்ச்சியடைந்ததன் காரணமும்.

இத்தகைய அடிப்படையிலிருந்துதான் நாம் அமைப்புகளை மதிப்பீடு செய்ய வேண்டும். நம்முடைய அமைப்புகள் (கட்சிகள்) என்ன பேசினாலும், பிரகடனம் செய்தாலும் அவை தாம் கூறுவதில், ஒரு பகுதியையேனும் செய்கின்றனவா? அவை உண்மையைத்தான் கூறுகின்றனவா? என்பதை நாம் முதலில் கவனிக்க வேண்டும். ஏன் செய்ய இயலவில்லை என்பதையும் முறையாக ஆய்வு செய்ய வேண்டும். அதற்கான காரணங்களில் ஒன்று செய்ய வேண்டுமென ஏற்கப்பட்ட பணி செய்ய முடியாததாக இருக்கலாம் (அதாவது வரம்பறியாத பணி); குருவியின் தலையில் பனங்காயைக் கட்டியது போல ஆகலாம்: இதுவே மிகு தீவிரவாதப் போக்கு. இது அமைப்பை அழிக்கும். எஞ்சியவர்களும் இதனால் மனச்சோர்வடைந்து எதையும் செய்ய முன் வராமல் போய்விடுவர்.

இன்றுள்ள நிலையில் புரட்சிகர இயக்கங்களிலும் அமைப்புகளிலும் இயங்கி வரும் தோழர்கள் அவரவர் இணைந்து செயல்படும் அமைப்புகளையும் பிற அமைப்புக்களையும் வேறெந்த அடிப்படையிலிருந்தும் அளப்பதோ மதிப்பிடுவதோ சரியல்ல.

அரசியல் இலட்சியத்தை நிறைவேற்றுவது அமைப்புத்தான். அமைப்பு உள்ளே உளுத்துப்போனதாக இருந்தால் புரட்சிப்பேச்சு வெட்டிப் பேச்சாகும். ஆதலால் அணிகளும் ஆதரவாளர்களும் ஒரு அமைப்பின் அரசியலை அறியும்போது முதலில் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுவது அந்த அரசியல் பேசும் அமைப்பின் தன்மையையே. அரசியலில் அக்கறை கொண்டவன் அமைப்புக்கு, அமைப்பின் தன்மைக்கு அரசியலை விட மிகப்பெருமளவு அக்கறை செலுத்துவான். உடல் நன்றாக இருந்தால் தான் எதையும் சாதிக்க இயலும். அமைப்பு உடலுக்கு இணையானது? ஓட்டப் பந்தயத்தில் நொண்டியரல் வெற்றிபெற முடியுமா? இந்த அடிப்படையிலிருந்து தான் ‘இரண்டாம் தரமான அரசியல் திட்டமாக இருந்தால் கூட மிகப்பெரும் தவறல்ல. ஆனால் முதல் தரமான கட்சியாக (அமைப்பாக) இருத்தல் முதல் பெருந்தேவை’ என்கிறார் லெனின் (We can work even with a Second rate programe but we Must have a first rate party) இந்த அடிப்படையே ‘அமைப்பை அரசியலுக்கு (இயங்கியல் இலக்கணத்துக்கு)க் கட்டுப்படுத்து’ என்று கூறுவதன் உட்பொருள். புரட்சிகரமான அரசியலை புரட்சிகரமான அமைப்பால் தான் வெற்றிகரமாக நிறைவேற்ற இயலும். குருட்டுப்பூனை ஒவ்வொரு நாளும் விட்டத்தில் பாயாது

❋ தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழப் போராட்டமும் சிங்கள மக்களும்.

பார்த்தசாரதி

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சிங்கள மேலாதிக்கவாத அடக்குமுறைக்கு எதிரானது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால் தமிழ் மக்கள் சிங்கள மக்கள் முழுப்பேரையும் தமது எதிரிகளாக கருதவுமில்லை; கருத நியாயமுமில்லை. இதனைத் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் யாவுமே ஏற்றுக் கொண்டதுடன் தமது கொள்கைத்திட்டப் பிரகடனங்களிலும் வலியுறுத்தி உள்ளன. அவை சிங்கள அரசாங்கத்தையும், அதன் பின்னணியில் உள்ள சக்திகளையுமே தமது எதிரிகளாகக் கணிக்கின்றன. ஆயினும் சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்களின் பிரச்சனைகளை உணர வைப்பதிலும், நியாயப்படுவதிலும் பெருமளவுக்கு எல்லோருமே தவறி விட்டனர். சிங்கள மக்கள் எமது பிரச்சனைகளை விளங்கிக் கொள்ள வேண்டும் என்பது மிகவும் அடிப்படையான ஒரு அம்சமாகும். அந்த அவசியத்தை நாம் கருத்தில் எடுக்காமல் இருப்பது அல்லது குறைத்து மதிப்பிடுவது, போராட்டத்திற்குக் கிடைக்கக்கூடிய நல்ல சக்திகளின் ஆதரவைப் பயன்படுத்தத் தவறியமைக்குச் சிறந்ததோர் உதாரணமாக அமைந்து விடக்கூடும்.

தமிழ் மக்களையே எடுத்துக்கொண்டால், தமது பிரச்சனைகளைப் பற்றித் தெளிவான அறிவு கொண்டவர்கள் மிகவும் குறைந்த தொகையினரே என்பதை யாவருமறிவர். இந்த அடிப்படையில் சிங்கள மக்கள் எமது பிரச்சனைகளை விளங்கிக் கொண்டிருப்பார்கள் என நாம் கருதுவது பிழையாகும். அவர்கள் எமது பிரச்சனைகளைச் சரியாக அறிந்து கொள்வதற்கும், எங்களைப் பற்றிய சரியான கணிப்பீடுகளை வைத்துக்கொள்வதற்கும், எமது போராட்டத்தின் நியாயத்தை உணருவதற்கும் பல்வேறு காரணிகள் தடையாய் உள்ளன. அவற்றை பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

[1] எமது பிரச்சனை இருவேறு மொழி, பண்பாடு என்பவற்றை பின்பற்றுவோருக்கிடையிலான பிரச்சனையாக இருப்பதால் அவைபற்றி ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கு மொழி ஓர் தடையாக உள்ளது. உதாரணமாக தமிழர்களின் பிரச்சனையைச் சிங்கள மக்கள் அறிவதற்கு அவர்களுக்குத் தமிழ் கற்கவேண்டியதாக உள்ளது. அல்லது தமிழர் சிங்கள மொழியில் கூறவேண்டியதாயுள்ளது. அதற்கு மேலாக இரு சாராருமே புரியக்கூடிய ஆங்கில மொழியைப் பயன் படுத்த வேண்டியுள்ளது. ஆங்கிலமொழியை விளங்கிக் கொண்ட உயர்மட்ட சிங்கள மக்கள் மத்தியில் ஒரு சிறுவட்டத்தினரிடையே தமிழர் பிரச்சனைக்குச் சாதகமான தன்மைகள் தென்படுகின்றன என்பதனையும் குறிப்பிட வேண்டும்.

[2] சிங்கள மக்களுக்கு தமிழர் பற்றிய செய்திகளைக் கொடுக்கும் சாதனங்களான தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை ஆகிய யாவுமே சிங்கள மேலாதிக்கத்தை வலுப்படுத்தக் கூடிய செய்திகளையும், கருத்துக்களையுமே அவர்களுக்கு வழங்குகின்றன. இந்தத் தொடர்பு சாதனங்கள் மேலாதிக்கவாதப் போக்கினால் லாபம் காணும் சக்திகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவையாகும். சிங்கள மக்களுக்கு தமிழர் பற்றிய தவறான செய்திகள் பரப்பப்படுவதுடன் அவர்கள் மத்தியில் தவறான கண்ணோட்டங்களும் முன்வைக்கப்படுகின்றன. அவர்கள் தவறான பாதையில் வழி நடத்தப் படுகின்றார்கள்.

[3] நீண்டகாலமாகச் சிங்கள மக்கள் மத்தியில் தமிழர் பற்றிய தவறான எண்ணங்களும் முடிவுகளும் பரவலாக்கப்பட்டுள்ளன. அவை:

i சிங்களவர்கள் ஆரியர்கள். அவர்களே இலங்கைக்கு முதலில் வந்து குடியேறியவர்கள். தமிழர்கள் பின்னர் வந்து குடியேறியவர்கள்.

ii தமிழர்கள் தென்னிந்தியாவுடனும், சர்வதேச ரீதியாகவும் இனத்தொடர்புள்ள மக்களைக் கொண்டவர்கள்; அந்தத் தொடர்புகள் வலிமை மிக்கவை. அவர்களுடைய இனத்தின் விடுதலை சிங்கள இனத்தின் அழிவுக்கும் காரணமாகும்: அல்லது சிங்கள இனத்தின் எதிர்காலத்திற்கு அச்சுறுத்தலாக அமையும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

iii இலங்கைத்தீவு பௌத்த மதத்திற்கு உரி தெனப் புத்தபிரானாலேயே நிர்ணயிக்கப்பட்டது. இங்கு பௌத்த மதத்தை அனுசரிப்பவர்களே மேலாண்மை செலுத்தக் கூடியவர்கள்.

iv தமிழர்களின் கோரிக்கைகள் நியாயமற்றவை. அவர்களின் போராட்டம் நியாயமற்றது. அவர்களை இராணுவத்தின் மூலம் அடக்குவது அவசியம்.

இவ்வாறு சிங்கள மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகின்ற கருத்துக்கள் தவறானவை ஆயினும் அவற்றை விளக்கப்படுத்த எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. தமிழர் பற்றிய பயங்களும், சந்தேகங்களும் சிங்கள மக்களிடமிருந்து நீக்கப்படல்வேண்டும். இதனைத் தமிழர்கள் செய்வதே அவசியமானதும், பொருத்தமானதுமாகும்.

இனக் கலவரங்களின் போதெல்லாம் சிங்கள மக்கள் தமிழ்மக்கள்மீது மேற்கொண்ட அக்கிரமான நடவடிக்கைகளுக்கு அவர்கள் தமிழ்மக்கள் பற்றிக்கொண்டிருந்த தவறான கருத்துகளும், தவறான வழி நடத்தல்களுமே காரணம் எனலாம்.

இப்பொழுதும்கூட சிங்கள அரசாங்கமும் அதன் பின்னணிச் சக்திகளும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தவறானவையாகவே உள்ளன. அவர்கள் சிங்கள மக்களைத் தேசியப் பிரச்சினையின்பால் திசை திருப்புவதன் மூலம் அரசியல் லாபம் பெற விளைகின்றனர். தமிழ்மக்களின் பிரச்சினையும், போராட்டமும் அவர்களுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலாகக் காட்டப்படுவதுடன் அதற்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய பாதுகாப்பு நிதி, தேசிய தொண்டர் படை, கண்காணிப்புக் குழு என்பன போன்ற அமைப்புக்கள் துரிதமாகச் செய்யப்படுகின்றன. இது சிங்கள மக்கள் மத்தியில் கற்பனையான ஒரு பெரிய அச்சுறுத்தலைக் காட்டும் அம்சமாகவே கொள்ளவேண்டியுள்ளது. அதுமட்டுமன்றித் தமிழ்ப்பகுதிகளில் எழுச்சிபெறும் விடுதலை சக்திகள் பயங்கரவாதமாகவும், அவர்களின் அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் பயங்கரவாத வன்முறை நடவடிக்கைகள் எனவும் கூறப்படுகின்றது. சிங்கள இராணுவத்தினருக்குத் தமிழ்ப் பகுதிகளில் ஏற்படுகின்ற இழப்புகளைகூட மறைத்து தவறான புள்ளி விபரங்களையே வழங்குவது குறிப்பிடத்தக்கது. இனவெறியூட்டப்பட்ட சிங்கள இராணுவத்தினால் அப்பாவித் தமிழ்மக்கள்மீது மேற்கொள்ளப்படும் கொடூர நடவடிக்கைகள் யாவும் பயங்கரவாதிகள்மீதான நடவடிக்கைகள் எனவே குறிப்பிடப்படுகின்றன. சிலவேளைகளில் சிறு குழந்தைகளும், வயது முதிர்ந்தவர்களும், சித்தசுவாதீனமற்றவர்களும் பயங்கரவாதிகள் பட்டியலில் இடம்பெறுவதைக் காணலாம்.

எனவே சிங்கள மக்களுக்கு தமிழர்பற்றிய சரியான நிலைப்பாட்டினை மேற்கொள்ளக்கூடியவகையில் செய்திகளை அறிவதற்கு நாம் ஒரு சந்தர்ப்பம் அளித்தல் அவசியமாகும். ஒரு குறிப்பிட்ட இனத்தவர் முழுப்பேருமே இன்னொரு இனத்தை அடக்குவதில் ஈடுபடுவதில்லை. அங்குள்ள பேராசை மிக்க சக்திகளே இவற்றைச் செய்கின்றன. உதாரணமாகப் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கருத்துக்களைப் பிரித்தானியர்களே முன்வந்து எடுத்துக் காட்டியதுடன் அதற்கு எதிரான போராட்டங்களிலும் ஈடுபட்டனர். சிங்கள மக்களின் அரசு ஓர் ஏகாதிபத்திய அரசாக இல்லாது விட்டாலும் நவகாலனித்துவ பின்னணியில் சிக்கித் தவிக்கின்ற அரசாகும். இங்கு சிங்கள மக்கள் எல்லோருமே தமிழ்மக்கள்மீதான அடக்குமுறை நடவடிக்கைகளில் ஈடுபடாது விட்டாலும் அத்தகைய கருத்துக்களும், அதற்கான நியாயங்களும் அவர்களிடம் பரவலாக்கப்பட்டுள்ளன. அவற்றை நீக்குவதற்கு நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எமது போராட்டத்திற்கு மட்டுமன்றி அவர்களின் பொருளாதார விடுதலை முயற்சிகளுக்கும் வழி வகுப்பதாக அமையும்.

தமிழ் மக்களுக்கான பிரச்சினைகளில் முக்கியமானது தமிழ்ப் பாரம்பரியப் பிரதேசங்களில் சிங்கள மக்களின் குடியேற்றங்களை ஏற்படுத்துவதாகும். இங்கு சிங்கள மக்களின் செழிப்பான நிலங்கள் பல தேசியக் கொம்பனிகளின் உற்பத்திகளுக்கு வழங்கப்பட்டிருப்பதையும் தொடர்புபடுத்திப் பார்க்கலாம். உண்மையில் சிங்கள மக்களின் செழிப்பான பகுதிகள் அந்நியரின் கட்டுப்பாட்டிற்கு வழங்கப்பட்டதை உணரவிடாது இனவாத முலாம் பூசுவதன் மூலம் தமிழ்ப்பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்களை ஏற்படுத்துவதில் திசை திருப்புவதை அவதானிக்கலாம். இவை பற்றிய சரியான விளக்கங்கள் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்படல் வேண்டும். அதன் மூலம் சாதாரண சிங்கள மக்களுக்கும் அவர்களின் பெரும்பான்மை பலம் கொண்டதெனக் கூறப்படும் அரசாங்கத்திற்கும் இடையிலான முரண்பாட்டைத் தெளிவுபடுத்தலாம். அதுமட்டுமன்றி சாதாரண



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்கள மக்களை நாம் தமிழர்களின் எதிரிகளாகக் கணிக்காத போதிலும், திட்டமிட்ட குடியேற்றங்களின் பிரதிநிதிகளாக வரும்போது அவர்களுக்கு எதிராகப்போராட வேண்டியவர்களாகவும் உள்ளோம். தேவையேற்படுமிடத்து அவர்கள் மீது மேற்கொள்ளக் கூடிய வன்முறை நடவடிக்கைகள் பற்றியும் அவர்களுக்கு முன்கூட்டியே விளக்கம் அளிக்கப்படுதல் அவசியமாகும்.

### அநாகரீகமானவர்களுள் ஒரு நாகரீகமானவர்

14-05-1985 அன்று அநுராதபுரத்தில் ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து, அநுராதபுர இராணுவ முகாமில் பாதுகாப்புக் கருதி தஞ்சமடைந்த அப்பாவித் தமிழ் மக்களை இராணுவ கோப்ரல் ஒருவர் இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதினைக் கண்ட இராணுவ மேஜர் ஒருவர் கோப்ரலைதனது கைத் துப்பாக்கியால்சுட்டுக் கொன்று இராணுவ நாகரிகத்திற்கு எடுத்துக்காட்டானார். அவருக்கு எமது கௌரவங்கள்!

சாதாரண சிங்கள மக்கட்கூட்டத்தில் இருந்தே தமிழ் மக்களை அடக்குகின்ற அரசுஇயந்திரத்தின் பிரதிநிதிகள் தோற்றம் பெறுகின்றார்கள். அவர்களே தமிழ் மக்கள் மீது மோசமான கொலை, கற்பழிப்பு, கொள்ளை ஆகிய வன்முறைகளைச்செய்கின்றார்கள். தமிழ்ப்போராளிகளின் எதிர் நடவடிக்கைகளினாலும் பாதிக்கப்படுகின்றார்கள் இவர்கள் சிங்கள—பௌத்த புனிதப் போருக்காக வந்தவர்களாகவோ, தமது அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகவோ இராணுவத்தில் சேர்ந்தவர்களாக இருக்ககலாம். இவர்களுக்கு ஆரம்பத்திலேயே தமிழ் மக்களின் பிரச்சனை பற்றிய தகவல்கள் சரியாகக் கிடைத்திருந்தால் அவர்களின் மன உணர்வுகள் நிச்சயமாக மாறுபட்டதாக இருந்திருக்க முடியும்.

சிங்கள மக்கள் மத்தியில் பிரசார நடவடிக்கள் சரியாக மேற்கொள்ளப்படவில்லை என்பதை யாவரும் அறிவர். சர்வதேச ரீதியில் எமது பிரச்சனைகளை நியாயப்படுத்துவதற்கு நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் ஓரளவையாவது சிங்கள மக்கள் மத்தியில் மேற்கொள்ளவில்லை என்பதை நினைக்கும் போது வருத்தமாகவே உள்ளது. அவர்களுக்கு எமது பிரச்சனைகளை தெளிவுபடுத்தல் வேண்டும். நாளாந்தச் செய்திகளை தெரியப்படுத்தல் வேண்டும்; எம்மைப்பற்றிய சந்தேகத்தையும், பயங்களையும் தெளிவுபடுத்தி இல்லாமற் செய்தல் வேண்டும். ''நாம் சிங்கள மக்களையோ, மொழியையோ, பண்பாட்டையோ, எதிர்க்கவில்லை; அவற்றை நாம் கௌரவிக்கின்றோம். அவர்களின் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளையும், பாரபட்சமான நடவடிக்கைகளையுமே நாம் எதிர்க்கின்றோம்'' என்பதை நாம் தெளிவுபடுத்தல் அவசியம்.

இதற்கு நவீன தொடர்பு சாதனங்களான பத்திரிகை, வானொலி, ஒலிப்பதிவு போன்றவற்றைக் கையாளுதல் அவசியம். அவர்களின் மொழியில், அவர்களுக்கு விளங்கக் கூடிய விதத்தில் இவற்றை நாம் அவர்களுக்கு விளங்கப்படுத்தல் வேண்டும். அதுமட்டுமன்றி சிங்கள மக்கள் மத்தியில் உள்ள நல்ல நண்பர்களுடன் தொடர்ச்சியான கருத்துப்பறிமாறல்களை வைத்திருப்பதும் அவசியமாகும்.

இந்த முயற்சிகள் தனிநபர்களினால் மேற்கொள்ளப்படுவதை விட விடுதலை இயக்கங்களினால் மேற்கொள்ளப்படுவது இலகுவானதாகும். கூடிய பலன்களைத் தரக் கூடியவையுமாகும். உதாரணமாக தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்கள் நடத்துகின்ற வானொலி சேவைகளில் சிங்கள மொழிச் சேவைகளையும் விஸ்தரிப்பது சிறந்த முறையாகும். முன் கூட்டியே ஓர் விடுதலை இயக்கம் இந்த முயற்சியை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இறுதியாகக் கூறுவதாயின் சிங்கள மக்களின் மேலாதிக்க நடவடிக்கைகளை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்; அவற்றுக்காக நாம் நிச்சயமாகப் போராடுகிறோம். ஆனால் முழுச் சிங்கள மக்களையும் நாம் எதிர்க்கவில்லை; அவர்கள் எங்கள் பிரச்சனைகளை முழுதாக அறியவுமில்லை. உணரவுமில்லை. ஆகவே அவர்கள் மத்தியில் சரியான கருத்துக்களும், செய்திகளும் பரப்புவதில் நாம் அக்கறையாக இருத்தல் வேண்டும். அது எங்கள் போராட்டத்தை வெற்றி காணச் செய்வதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வகிக்கச் செய்யும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தோட்டத் தொழிலாளரைப் பற்றிய பொய்மைகளும், உண்மைகளும்

தொடர்: நான்கு — மாவலியான்

## (6) சுகாதாரம்:

சத்திலாத உணவு, கந்தலான ஆடை, அறியாமை, லைன் காம்பராக்கள்.... இந் நிலையில் சுகாதாரமும், சௌக்கியமும் இம் மக்களிடையே எவ்வாறிருக்கும் என்பதை அதிகம் விளக்கத் தேவையில்லை

❀ எமது ஆய்வின்படி 40 தோட்டங்களில் 8-ல் மாத்திரமே மலசல கூடங்கள் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருந்தன. 21 தோட்டங்களில் தொழிலாளர் தேயிலைத் தோட்டங்களையும், 16 தோட்டங்களில் நீரோடைகளையும், 75 தோட்டங்களில் ஆறுகளையும் மலசல கூடங்களாகப் பயன்படுத்தினர் எல்லாத் தோட்டங்களிலும் வீட்டு முற்றங்கள் சிறுவரால் மலசலகூடமாக்கப் பட்டிருந்தன. இங்கு 243 பேருக்கு 1 மலசல கூடம் என்ற விதத்தில் காணப்பட்டது. 71% வீதமான மலசலகூடங்கள் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருக்கவில்லை. இங்கு விநியோகிக்கப்படும் நீரின் தூய்மையைப் பற்றி எவரும் உத்தரவாதமளிக்க முடியாது. 42 குடும்பங்களுக்கு ஒரு தண்ணீர்க்குழாய் என்ற விதத்தில் அமைந்திருந்தது. இதனால் காலையில் வேலைக்குச் செல்வதற்கு முன்னர் குழாய்களில் மக்கள் அலைமோதுகின்றனர். ''ஓய்வு பெற்ற'' வயோதிபர்கள் தகரத் தொட்டிகளில் நீரைச் சேகரித்து உதவுவதால் எல்லாருக்கும் குடிப்பதற்கு நீர் கிடைக்கிறது. ஆனால் குளிப்பதற்கும், துணி துவைப்பதற்கும் ஆறுகளுக்கும், அருவிகளுக்கும் சில சமயங்களில் 3 மைல் தூரம் செல்லவேண்டியுள்ளது. இதனால் பெண்களுக்கு விடுமுறை நாட்களில்கூட ஓய்வு கிடைப்பதில்லை. விறகு தேடுவதற்கும், குளிப்பதற்கும் நேரம் சரியாகிவிடுகிறது

❀ மருத்துவ வசதி - ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 40 தோட்டங்களில் 8ல் மாத்திரமே டிஸ்பென்சரிகள் இருந்தன. அதில் ஒரு மருத்துவராவது M.B.B.S படித்தவராக இருக்கவில்லை. அவற்றில் 4 டிஸ்பென்சரிகளில் இருந்து தோட்டத் தொழிலாளரைவிட அயலில் இருந்த நகரத்து வர்த்தகர்களும், உத்தியோகத்தர்களும் கூடுதலான சேவையைப் பெற்றனர். தோட்டத் தொழிலாளருக்காக வழங்கப்படும் மருந்துகளை இவர்களுக்கு விநியோகித்து டிஸ்பென்சரிகள் நல்ல வருவாய் பெற்றன. 1 மருத்துவர் கருச்சிதைத்தல் போன்ற காரியங்களுக்குப் பெயர் போனவராக இருந்தார் 3 தோட்டங்களில் டாக்டரை விட மருந்து கலப்பவர் ''கைராசிக்காரர்'' எனக் கருதப்பட்டனர். எல்லா டிஸ்பென்சரிகளிலும் கைலஞ்சம் கொடுப்பவர்க்கே தரமான மருந்து கிடைத்தது. பெரும்பாலான டிஸ்பென்சரிகளில் இருந்து தோட்டத் தொழிலாளருக்காக வழங்கப்படும் மருந்துகள் கள்ளச் சந்தையில் விற்கப்படுகின்றன.

❀ அரசாங்கஇலவசஆஸ்ப்பத்திரிகளின் கதவுகள் தோட்டத் தொழிலாளரைப் பொறுத்தளவில் மூடப்பட்டுள்ளன. தோட்ட நிர்வாகத்தின் கடிதம் இன்றி தோட்டத் தொழிலாளர் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்படமாட்டார்கள். தோட்ட நிர்வாகத்தின் அனுமதியுடன் அரசாங்க ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தினமொன்று 3-50 சதவீதம் நிர்வாகக் கட்டணம் செலுத்தியாகவேண்டும். 1912ம் ஆண்டில் இயற்றப்பட்ட மருத்துவச் சட்டத்தின் பிரகாரமே இம்முறை அமுலில் இருந்து வருகிறது. இச்சட்டத்தின்படி 35 சதமாக இருந்த கட்டணத்தை அரசாங்கம் 3-50 ரூபாவாக உயர்த்தியது. ஆனால் தோட்டத் தொழிலாளரின் மருத்துவ நலனுக்காக ஒதுக்கப்படும் 50 சதம் (1912ம் ஆண்டு சட்டத்தின்படி) மாத்திரம் உயர்த்தப்படவில்லை.

❀ டென்மார்க் நாட்டைச் சேர்ந்த சமூகவியலாளர் டாக்டர் சார்ள்ஸ் பென்ட்லே (Dr. Charesl Pendley) 40 தோட்டங்களில் 1982ம் ஆண்டு தாம் நடாத்திமுடித்த ஆய்வின் அடிப்படையில் பின்வருமாறு கூறுகிறார். மந்த போசாக்கு; ''தோட்டத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துறையில் கர்ப்பவதிகளின் மத்தியில் சர்வசாதாரணமாகக் காணப்படும் மந்த போசாக்கு இன்று தோட்டப்புற மக்கள் எதிர்நோக்கும் பாரதூரமான பிரச்சனைகளில் ஒன்று".

❋ பிரசவ கால நலன்கள்:- அவர்கள்கூறுகிறார்கள் "பிரசவம் சம்பந்தமான சட்டங்கள்பிரசவத்திற்கு முன்னர் இருவாரங்களும், பிரசவத்திற்குப் பின்னர்இருவாரங்களும் விடுமுறை வழங்கவேண்டும்" என்று கூறுகிறது. ஆயினும் பிரசவத்திற்கு இரண்டு, மூன்று நாட்கள்வரை வேலை செய்து விட்டு பிரசவமான ஒருசில நாட்களில் வேலைக்குத் திரும்புவது பற்றிய புகார்கள் வெகுசகஜமாக உள்ளன.

❋ இத்தகைய காரணங்களால் தோட்டத்தொழிலாளரின் நிலைமை மோசமாக உள்ளதைப் பின்வரும் புள்ளி விபரங்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. (அட்டவணை ஒன்றைப் பார்க்கவும்)

அட்டவணை ஒன்று:-

I. சிசுமரணம்:- பிறக்கும் 1000 குழந்தைகளுக்கு

| ஆண்டு | நாடு முழுவதும் | தோட்டத்துறை |
|---|---|---|
| 1969 | 52.7 | 110.00 |
| 1979 | 48.0 | 114.3 |

II. பிரசவத்தின் போது தாய் மரணம் (1000க்கு)

| நாடு முழுவதும் | தோட்டத்துறை |
|---|---|
| 1.5 | 2.7 |

III கர்ப்பிணிகள் மரணம் (1000க்கு)

| நாடு முழுவதும் | தோட்டத்துறை |
|---|---|
| 5 6 | 144.0 |

IV. ஆயுட்காலம்

| | நாடு முழுவதும் | தோட்டத்துறை |
|---|---|---|
| | 66.1 | 52.1 |
| ஆண்:- | 64.2 | 50.1 |
| பெண்:- | 67.1 | 54.1 |

V. ஒரு லட்சம் மக்களுக்கு மருந்து சேவையில்

நாடு முழுவதும்

சராசரி 25.7 டாக்டர்கள்

50.8 தாதிகள். ஆனால் மலையகத் தொழிலாளர் வாழும் மாகாணங்களில் இவ்விதம் மிகக் குறைவாக உள்ளது.

| மாகாணம் | டாக்டர்கள் | தாதிகள் |
|---|---|---|
| மத்திய மாகாணம் | 15.2 | 29.5 |
| சப்பிரகமுவ மாகாணம் | 13.4 | 34.6 |
| ஊவா மாகாணம் | 13.2 | 24.1 |

## 7. பிள்ளைக் காம்பரா:-

இது உண்மையில் தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகளுக்கான சேவையாக அல்லாமல் வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் தடையை நீக்கி சுரண்டலை எளிதாக்கும் ஒரு ஏற்பாடாகவே உள்ளது. பெரும்பாலான பிள்ளைக் காம்பராக்கள் தோட்டத்துரைமாரின் மாட்டுத் தொழுவத்தை விடவும் மிக அசுத்தமாக உள்ளன. இங்கு ஆணவம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிடித்த ஆயா ஒருத்தி இருப்பாள். அவளிடம் தம் குலக்கொழுந்தை ஒப்படைத்து விட்டுத் தாய்மார்கள் வேலைக்குச் செல்வார்கள். பால் கொடுக்க வேண்டிய நேரத்தில் வியர்வை சிந்த ஓடோடி வந்து கொடுப்பார்கள். குழந்தை தாயின் பாலுடன் வியர்வையும் அருந்தி வளர்கிறது. தற்போது தாதிகளாகப் பிற இனத்தவர் குறிப்பாகச் சிங்களவர் நியமிக்கப்படுவது இம் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி இருப்பதில் நியாயம் இருக்கிறது. டாக்டர் பெல்ட்லே அது பற்றிக் கூறுகிறார். "பிள்ளைக் காம்பராவைப் பயன்படுத்துவோருக்கு ஆயாவின் மனோபாவம், மொழி, சாதியம் என்பன அவளை ஏற்றுக்கொள்ள முடியாமல் தடுக்கின்றன. பெற்றோருக்கு அவள் மீது நம்பிக்கை கிடையாது. குழந்தைகளுக்கோ அவளுடன் பேச்சிலோ, சரீரரீதியிலோ தொடர்பு கிடையாது. அவளுடைய இனவேறுபாட்டை விட மொழியாற்றலும், தொழிலில் காட்டும் மனோபாவமுமே பிரதானமாக விமர்சனத்துக்குள்ளாகின்றன." இந்தப் பிள்ளைக் காம்பராக்களுக்கு சர்வதேச நிறுவனங்கள் வழங்கும் பால்மா, திரிபோஷா ஆகியவை கள்ளச் சந்தைக்குப் போகின்றன. குழந்தைகள் மந்த போஷணையால் வாடுகின்றன.

## 8: கல்வி:-

மலையகத் தொழிலாளரின் கல்வி பற்றி தனியான தொரு நூல் வெளியிடலாம். எமது "இலவசக் கல்வியின்" லட்சணத்தையும் அதில் நிலவும் வர்க்கத் தன்மையையும் படம் பிடித்துக்காட்ட இதைவிடச் சிறந்த தலைப்புக் கிடையாது. இருப்பினும் இந் நூலின் நோக்கத்தை கருத்தில் கொண்டு சில விபரங்களை மாத்திரம் இங்கு நோக்குவோம்.

I. 16-05-1983 மாலை 6 மணி வானொலிச் செய்தியில் அமைச்சர் திரு. காமினி. திசநாயக்காவின் கூற்றுப்படி இலங்கையில் கல்வி அறிவுள்ளோரின் தொகை 82% ஆகும். ஆனால் தோட்டத் தொழிலாளர் மத்தியில் இது தலைகீழாக உள்ளது. இவர்களில் 80 சத வீதமானோர் கல்வி அறிவு இல்லாதோர்.

II. தோட்டத்துறையில் 5 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்ட கல்வி வயதில் 6.7 வீதத்தினர் பாடசாலை செல்வதில்லை. இதில் ஆண்கள் 51.4%. பெண்கள் 72% (மூலம்:-எமது ஆய்வு)

III. கல்வி மட்டங்கள் (விகிதாசாரம்) (அட்டவணை இரண்டைப் பார்க்கவும்)

அட்டவணை இரண்டு:-

| | நாடு முழுவதும் | நகரம் | கிராமம் | தோட்டப்புறம் |
|---|---|---|---|---|
| பாடசாலை செல்வோர் | 17.5 | 11.6 | 15.8 | 38.9 |
| ஆரம்ப வகுப்புகள் | 44.6 | 37.8 | 45.4 | 51.0 |
| நடுத்தர வகுப்புகள் | 9.4 | 3 8 | 31.7 | 8.8 |
| ஜி. சி. ஈ (சாதாரணம் சித்தியடைந்தோர்) | 6.6 | 11.0 | 6.3 | 3,3 |
| ,, (உயர்தரம் ,, | 6.9 | 11.0 | 0.8 | 0.0 |

மூலம் 1969/70 சமூக பொருளாதார ஆய்வு குடிசன புள்ளி விபரத் திணைக்களம்.

IV. எமது ஆய்வின் படி தோட்டத்துறையில் 38.8% வீதத்தினருக்கு (ஆண் 27.9% பெண் 49.8%) கையெழுத்துத்தானும் வைக்கத் தெரியாது. 33.4 வீதத்தினருக்கு கையெழுத்து மாத்திரமே வைக்கத் தெரியும், எழுத வாசிக்கத் தெரியாது. எனவே 72 2% வீதத்தினர் கல்வி அறிவற்றோர்.

V. இத்தகைய பயங்கரமான நிலைமைக்கு காரணம் ;- தோட்டத் தொழிலாளியாக இருப்பதற்கு கல்வி அவசியமில்லை. இன்னொரு வகையிற் பார்த்தால் சிறந்த கல்வி வசதி அளித்தால் எதிர்காலத்தில் 'சிறந்த'' (கல்வி அறிவற்ற) தொழிலாளரை இழக்க நேரிடும். 1979-ம் ஆண்டு மலையகத் தொழிலாளருக்கான கல்வியின் நோக்கத்தை சிபார்சு செய்த முதலாவது கொமிஷன் (Burrows Commission) தோட்டத் தொழிலாளருக்கு வாங்கும் சம்பளத்தை சரிபார்த்து கையெழுத்திடும் அளவுக்காவது அடிப்படைக் கல்வி வழங்க வேண்டும் என்று கூறியது. இதே நோக்கத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோடு கூடிய கல்வியைத் தான் மலையகத் தொழிலாளருக்கு இன்றளவும் அரசாங்கம் வழங்கி வருகிறது. அதற்கு மேல் கல்வி கற்பதை திட்டமிட்டே அரசாங்கம் தடுத்து வருகிறது. என்பதை பின்வரும் உண்மைகள் நிரூபிக்கின்றன:-

I. 1981-ல் நுவரெலியா மாவட்டத்தில் (இங்குதான் 30 வீதமான மலையகத் தமிழர் அடர்த்தியாக வாழ்கின்றனர். முழுச் சனத் தொகையில் இங்கு 47 வீதத்தை ஆக்குகின்றனர், தொண்டமான் அவர்களும் இப் பகுதியில் இருந்து தான் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். அரசியல் பெருந்தலைவர்களான அனுரா பண்டாரநாயக்கா, காமினி திசநாயக்கா ஆகிய இருவரும் கூட இத் தேர்தல் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர்கள்) தமிழ்ப் பாடசாலைகளுக்கென அவ்வருடத்திற்கு கல்வி அமைச்சு 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கியது. அதே காலத்தில் அவசரகால சட்டத்தை அமுல் படுத்த நாளொன்றுக்கு 11 மில்லியன் செலவானது. ஆனால் பாடசாலைக்கு ஒரு சதம் கூட செலவிடப்படாமல் 10 மில்லியன் ரூபாவும் திறைசேரிக்கு நுவரெலிய கல்வி இலாகாவால் திருப்பி அனுப்பப்பட்டது. இதற்கு அதிகாரிகளின் தேசிய காப்புணர்ச்சியைத் தவிர வேறெதுவும் உண்மையான காரணமாக இருக்க முடியாது.

✻ நுவரெலிய கல்வி மாவட்டத்தில் தமிழ்ப் பாடசாலைகளே எண்ணிக்கையில் அதிகமாகவுள்ளது. ஆயினும் வட்டாரக் கல்வியதிகாரி (C. E. O.) மட்டத்தை விட எந்தவொரு தமிழ் உயர் அதிகாரியும் நுவரெலியா கல்வி இலாகாவில் இல்லை. அது மாத்திரமல்ல அதில் பணிபுரியும் லிகிதர்களுள் பெரும்பாலானவர் தமிழரல்லாதவர்.

✻ பல வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ்ப் பாடசாலைகளின் முன்னேற்றத்திற்காக உதவி நல்க முன் வந்த சமயங்களில் இவ்வதிகாரிகளும் சில அரசியல்வாதிகளும் அத்தகைய உதவிகளை சிங்களப் பாடசாலைகளுக்கு வழங்குமாறு வற்புறுத்தியதால் அந் நிறுவனங்கள் தமது முயற்சியைக் கைவிட்டன. தற்போது தலவாக்கெலை தமிழ் மகாவித்தியாலத்திற்கு இத்தகைய ஒரு வெளிநாட்டு நிறுவனம் நிதியுதவி வழங்குகிறது. ஆனால் அதன் அன்பளிப்புகளையும், சிபார்சுகளையும் கூட இக் கல்வி இலாகா குறைத்தும், கட்டுப்படுத்தியும் பல இடையூறுகளைச் செய்து வருகின்றது.

II. தமிழ் பெற்றோர்களால் கட்டப்பட்ட பல பாடசாலைகள் மலையகத்திலே பலாத்காரமாக சிங்களப் பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ளன.

✻ தொடர்ச்சி 22-ம் பக்கம் பார்க்க

✻ [8ம் பக்கத் தொடர்ச்சி]

## அமைப்புக்களும்...

அதை ஒத்துத்தான் அதன் படைப்புமிருக்கும். பாசிசக் கட்சி அமைப்பால் ஒரு நல்ல சமுதாயத்தைக் கண்டிப்பாகச் சமைக்க முடியாது. அடிமைகளைக் கொண்டும் வெறியர்களைக் கொண்டும் சுதந்திர உலகைப் படைக்க முடியுமா?

சரியான தோழமையை அடிப்படையாகக் கொண்ட அமைப்பினுள் கருத்து முரண்பாடுகள் பலவீனத்தை ஏற்படுத்தாது. முரண்பாடுகளைச் சரியாகக் கையாண்டால் அவை வளர்ச்சிக்கே வழி வகுக்கும்; இதனை அடிப்படையாகக் கொண்டு தான் "இணைவதற்காகப் (முரண்பாட்டைக் கடந்தால்தான் அடுத்த நிலையில் உயர் மட்டத்தில் இணைய முடியும்) போராடு" என்று மாவோ கட்சி அணிகளுக்கு அறைகூவல் விடுத்தார்.

நான்தான் எல்லாமறிந்தவன், நானே உண்மையான புரட்சியாளன் என்ற மனப்போக்கை உறுதியாக அகற்ற வேண்டும். தெளிவாக, நேராக, பண்புடனும், தெரிந்த உண்மையை மிகைப்படுத்தாமலும், குறைப்படுத்தாமலும் மறைக்காமலும், மற்றவர்களை அவதூறு செய்யாமலும் கூறும் பழக்கத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும். தன்னாய்வுடன், பிறனாய்வு செய்ய வேண்டும். "நீ தவறு செய்தாய்" எனக்கூறும் பழக்கத்தை விட்டு "நாம் இத் தவற்றைச் செய்தலாகாது" எனக்கூறும் நெறியை பின்பற்ற வேண்டும்.

இங்ஙனம் செயல்பட்டால் புரட்சி இயக்கம் கண்டிப்பாக உறுதியான, நேர்மையான மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானதாக உருவாகும் என்பதில் ஐயமில்லை. புரட்சி வெற்றியடைய இது முதல் தேவை அல்லவா? ✻

நன்றி: மாக்சியம் இன்று
(நவம்பர்—டிசம்பர் 1934)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முல்லை மண்ணில் சில நாட்கள்!

—நகுலேஸ்

இன்று தமிழ்ப் பிரதேசமெங்குமே தமிழ்பேசும் மக்கள் தங்கள் பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து துரத்தியடிக்கப்பட்டு தற்காலிகமாகவோ, அல்லது நிரந்தரமாகவோ அகதிகளாக வாழும் நிலை காணப்படுகின்றது. முக்கியமாக கடந்தகால இனக்கலவரங்களாலும், அரச கூலிகளின் அராஜக நடவடிக்கைகளாலும், அரசின் அடக்குமுறைச் சட்டங்களினாலும் திருகோணமலை, மன்னார், வவுனியா மாவட்டங்களிலும், மலையகத்திலும், வடமாகாணத்தில் கரையோர பிரதேசங்களிலும், தாக்குதல்கள் நடாத்தப்படும் பிரதேசங்களிலும், ஆயுதப்படையினரின் முகாம்களின் சுற்றுப்புறங்களிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களால் அதன் சுற்றுப்புறங்களிலும், மட்டகளப்பில் அண்மையில் முஸ்லிம் மக்கள் என்ற போர்வையில் அரசகூலிகளாலும் சில குழுக்களின் தீர்க்கதரிசனமற்ற நடவடிக்கைகளாலும் பாதிப்படைந்த தமிழ்மக்களும் முஸ்லிம் மக்களும் அகதிகளாக மாறும் நிலை ஏற்பட்டது. இவர்களில் சிலர் தமது பாரம்பரிய பிரதேசங்களுக்கு திரும்பிச் சென்றாலும் அநேகர் இந்தியாவிற்கும், சிலர் தமது உறவினர் வீடுகளிலும், சிலர் வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டும், பலர் பல்வேறு அகதிகள் முகாம்களிலும் தங்கள் வாழ்நாளை கழிக்கின்றனர். நாம் இந்தக் கட்டுரையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையை ஆராய்வோம்.

முதலில் மூன்றுமாதங்களுக்கு மேலாக பல்வேறு அகதிகள் முகாம்களிலும், உறவினர்கள் வீடுகளிலும் பலத்த கஷ்டங்களின் மத்தியில் சீவித்த குமுழமுனை, அளம்பில், செம்மலைப் பிரதேச மக்களைக்கவனிப்போம். இவர்களை 21-12-1984 அன்று ஆயுதப்படையினர் சில மணித்தியாலத்துள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த நிலத்தை விட்டு துரத்தியபோது ஏதோ பொறுக்கக்கூடியதை பொறுக்கிக்கொண்டு அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறினார்கள். பின்னர் மூன்று மாதங்களை முகாம்களிலேயே கழித்தவர்கள் கடந்தமாதம் (சித்திரை) 1ம் 2ம் திகதிகளிலேயே தமது சொந்த நிலங்களுக்கு திரும்ப அனுமதிக்கப்பட்டார்கள்.

எல்லா முகாம்களுக்கும் பொதுவான புழுக்கத்தையும், நெருக்கத்தையும் விட்டு தமது வீடுகளுக்கு திரும்பியவர்களுக்கு வேதனைதான் எதிர்நோக்கியிருந்தது. இவர்களில் பெரும்பான்மையினரின் ஓலைக்குடிசைகள், பாய்கள் போன்றன கறையானால் சேதமாக்கப்பட்டிருந்தன, பல வீடுகள்மற்றும் வாழை, தென்னை போன்றன யானையினால் முறித்து வீழ்த்தப்பட்டிருந்தன. சில வீடுகளும் யானையினால் சேதமடைந்திருந்தன. அதிகமான வீடுகள், பாடசாலை உபகரணங்கள் APS லிருந்து பல பசளை மூடைகள், ட்ராக்டர் உதிரிப்பாகங்கள் முதலியன கொள்ளையடிக்கப்பட்டும், சேதமாக்சப்பட்டும் காணப்பட்டன. இவர்களின் பிரதான பொருளாதார காரணியான நெல்வயல்களில் பெரும்போக செய்கையின் அறுவடை காலத்திலேயே இவர்கள் கலைக்கப்பட்டதால் மிகவும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர். இவர்களின் பிரதான நெல்வயல்கள் தண்ணிமுறிப்பு எனும் பிரதேசத்திலேயே அமைந்துள்ளது. ஆனால் தண்ணிமுறிப்புப் பிரதேசம் அரச கூலிகளினால் தமது பாதுகாப்புப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு அதனுள் பிரவேசிப்பவர்கள் சுட்டுத்தள்ளப்படுகின்றனர். இதனால் நெற்செய்கையாளர் மாத்திரமன்றி பல்வேறு கூலித் தொழிலாளரும் மிக நெருக்கடியில் வாழ்கின்றனர். தொடர்ந்து இந்நிலை நீடிக்குமானால் குமுழமுனைப் பிரதேச மக்களின் பொருளாதார நிலை மிகவும் பாதிப்படையும். மிக வளம் உள்ள தண்ணிமுறிப்புப் பிரதேசம் எவ்வகையிலாவது மீட்டெடுக்கப்படவேண்டும். இதைத்தவிர தமிழ்மக்களின் சொத்துக்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களின் பொருள்கள் அரச கூலிகளால் கொள்ளையடிக்கப்படுவதைவிட வேறு தமிழர்களாலேயே கொள்ளையடிக்கப்படுவது மிக வருந்தத் தக்கது. எனவே பாதிக்கப்பட்ட பிரதேசத்தை சுற்றிவர உள்ள பிரதேசங்களில் விழிப்புக் குழுக்கள் அமைப்பதன்மூலமும் பொதுமக்களின் முழுமையான ஆதரவின் மூலமும் எதிர்காலத்தில் இத்தகைய கொள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளைகள் தவிர்க்கப்படவேண்டும். இதைத்தவிர இப்பிரதேசங்களைச் சார்ந்த சிறுர்களின் கல்வி மூன்றுமாதங்களாக பாதிப்புற்றிருந்தது. எனவே அந்தந்த ஊரிலுள்ள படித்த இளைஞர்களினுல் இக்குறைகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும். முக்கியமாக பாதிப்புற்ற பிரதேசங்களிலுள்ள மக்கள் தம்து பொதுவான நலன்கருதி ஒரே குழுவாக செயலாற்றவேண்டும். அதை விட்டு சாதி, சமய வேறுபாடுகளும், தற்பொழுது இயக்க வேறுபாடுகளும் கூட பொது நலனை பாதிப்பதை அனுமதிக்கக்கூடாது.

அடுத்ததாக நான்குமாதங்களுக்கு மேலாகியும் தொடர்ந்தும் அகதி முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்ற தென்னமரவாடி, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், நாயாறு, கருநாட்டுக்கேணி, தண்ணிமுறிப்பு, முறிப்பு, ஆறுமுகத்தான்குளம் போன்ற பிரதேசத்து மக்களின் நிலையைக் கவனிப்போம். இவர்களில் அநேகர் அன்று அரச கூலிகளால் துரத்தப்பட்டு பலநாட்கள் காடுகளில் தங்கி அல்லலுற்று குமுழமுனைப் பிரதேசத்திற்கு வந்தார்கள். பலர் உடுத்த உடையுடனேயே வெளியேறியவர்கள் பலநாட்களாய் உண்ண உணவின்றி, குடிக்க நீரின்றி சிறு குழந்தைகளும், வயோதிபர்களும், பெரியோர்களுமாக நடந்து வந்தவர்களை குமுழமுனை மக்கள் அன்புடன் பராமரித்தார்கள் பின்னர் குமுழமுனை மக்களும் துரத்தப்பட்டபோது முள்ளியவளை, தண்ணீரூற்று, கள்ளப்பாடு, சிலாவத்தை, கணுக்கேணி, வற்ருப்பளை போன்ற இடங்களில் உள்ள பல்வேறு பாடசாலைக் கட்டிடங்கள், நெற்களஞ்சியங்கள், பலநோக்கு கூட்டுறவு சங்கக் கட்டிடம், திரை அரங்குகள், கோயில் மடங்கள், கிராம அபிவிருத்திசபைக்கட்டிடங்கள் போன்றவற்றில் தஞ்சம் புகுந்தார்கள். தற்பொழுது பல்வேறு பகுதிகளிலுமுள்ள 14 முகாம்களில் ஏறத்தாழ 1000 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வாழ்ந்த பிரதேசம் தற்பொழுது பாதுகாப்புப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களுடைய குடியிருப்புக்கள் அரச கூலிகளால் தரைமட்டமாக்கப்படுகின்றன. இன்று இவர்கள் தமது வீடுகளை, வயல்களை, தென்னந்தோப்புக்களை, தொழில்களை இழந்து நான்குமாதங்களாயும் நிலைமையில் இன்னும் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. ஆரம்பத்தில் பல்வேறு பொது ஸ்தாபனங்களின் உதவிகள் இந்தமக்களுக்கு கிடைத்துவந்தன. காலம் செல்லச் செல்ல எல்லாவகையான வெளியார் உதவிகளும் முடிவடைந்தும், நிறுத்தப்பட்டும் போக இன்று அரசாங்கம் வழங்கும் 7 பேருக்கு ஒரு கிலோ அரிசி என்ற பிச்சைப் பங்கீட்டில் தங்கி வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. அதிகமாக ஒரேயொரு மரக்கறியுடனே மட்டும் மதியத்தில் சோறு உண்கின்றனர். அதிகமாக புடலங்காய், அல்லது பூசணிக்காயே வழங்கப்படுகின்றது. சில வேளைகளில் வெறும் சோறுகூட உண்ணும் நிலை காணப்படுகின்றது. பெரியவர்கள் தொகை அதிகமாக உள்ள முகாம்களில் கொடுபடும் சோறு போதாத நிலை காணப்படுகின்றது.

ஒரு பெரிய கிராமம் முழுவதுமே ஒரு சிறிய கட்டிடத்துள் அடைந்து வாழும் வாழ்வில் ஏற்படும் சிரமங்களை நினைத்துப்பாருங்கள். நான்கு மாதங்களாக இவர்கள் அனுபவித்த துன்பங்கள் இவர்களை மனோரீதியாக பலமாகப் பாதித்துள்ளது இதனுல் இவர்களிடையே சச்சரவுகளும் தமக்குள்ளேயே முரண்பட்டு வாழுதலும் தவிர்க்கமுடியாதுள்ளது. சுகாதார ரீதியாகவும் இவர்கள் மிகவும் குறைவான வசதிகளுடனேயே வாழ்கின்றனர். முகாம்களிலுள்ள தாய்மார்களில் மகப்பேற்றுக்காலம் மிகவும் துன்பம் நிறைந்தது. நோயாளிகளுக்கு முகாம் வாழ்க்கை சாவிற்கு ஒப்பானது.

முதலிலே முள்ளியவளையில் உள்ள நெற்களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் முறிப்பு எனுமிடத்தில் வாழ்ந்த மக்களை நோக்குவோம். இவர்கள் பிறர் நிலங்களில் விவசாயக் கூலிகளாக தொழில்புரிந்த சொந்த நிலமில்லாத மக்களாவார். இம்மக்கள் உஷ்ணத்தால் உபத்திரவப்படுகின்ருர்கள். உடனடியாக இவர்கள் வேறு வசதியான இடத்திற்கு மாற்றப்படவேண்டும். இவர்களுக்கு சொந்தமாக பயிர்ச்செய்கை நிலங்கள் வழங்கப்பட்டு, ஆரம்ப வசதிகள் வழங்கப்பட்டு வசதியான இடங்களில் குடியமர்த்தப்படவேண்டும். இதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளார்கள். நீர்ப்பாசன, குடியிருப்பு, கல்வி, சுகாதார வசதிகள் சிறந்த முறையில் கவனிக்கப்படவேண்டும்.

இவர்களைத் தவிர முகாம்களிலேயே வாழும் ஏனையபகுதி மக்கள் என்ருே ஒருநாள் தமது பாரம்பரிய நிலங்களில் நடப்போம் எனவும் தமது வயல்களைச் சுதந்திரமாக உழுவோம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றும் படகுகளில் ஏறி அலைகடலை என்றாவது கிழித்துச் செல்லவும் உறுதி பூண்டவர்கள். அதனாலேயே வேறு இடங்களிற்குச் செல்ல விருப்பமில்லாமல் முகாம்களிலேயே வாழ்கின்றார்கள். "பல கிராமங்களை தனது ஆயுதக் கூலிகளால் வெறுமையாக்கி, வீடெரித்து சொத்துக்களை சூறையாடி, சேதமாக்கி தமது சொந்த நிலங்களிலே மிக நெருங்கிய உறவுகொண்ட இந்த மக்களை அதிலிருந்து பிடுங்கி தூக்கித்தூர எறிந்த சிறிலங்காவின் தார்மீக அரசின் அழியாத நினைவுச்சின்னங்களாக இந்த முகாம்கள் திகழ்கின்றன".

இந்த மக்கள் எவ்வளவு காலம் முகாம்களில் தங்கியிருப்பார்கள் என்பது கேள்விக்குறியாதலால் இவர்களுக்குரிய முகாம் வசதிகள் மிக நன்றாக கவனிக்கப்படவேண்டும். பாடசாலைக் கட்டடங்களில் உள்ள முகாம்கள் வேறு வசதியான இடங்களுக்கு மாற்றப்படவேண்டும். இப்போதுள்ள 14 முகாம்களில் 8 முகாம்கள் பாடசாலைகளில் அமைந்துள்ளன. முள்ளியவளை வித்தியானந்தா உட்பட பல பாடசாலைகள் கடந்த மூன்று மாதங்களாக நடைபெறாமையால் அந்த பாடசாலைகளில் பயின்ற மாணவர்களும், முகாம்களில் தங்கியுள்ள மாணவர்களும் தமது கல்வியை இழந்துள்ளனர். பலத்த முயற்சியின் பின் அதிகமான பாடசாலைகள் தொடங்கியிருக்கின்றன. ஆனால் வேறு கட்டடங்களில் நடைபெறும் பாடசாலைகளில் இடம் பற்றாக்குறை நிலவுகின்றது. முகாம்களில் தங்கியுள்ள மாணவர்களும் இந்தப் பாடசாலைகளில் கல்விகற்க அனுமதிக்கப்படவேண்டுமாதலால் பாடசாலைகளின் வசதிகளைப் பெருக்க முயற்சியெடுக்கப்படவேண்டும்.

தற்போது இந்த முகாம்களின் சுகாதார நிலைமை மிகவும் மோசமடைந்து காணப்படுகின்றது. எனவே நிரந்தரமான ஒரு சேவை மனப்பான்மையுள்ள வைத்தியர் இந்தப்பணிக்கு அமர்த்தப்படல் விரும்பத்தக்கது. இப்பொழுது அரசாங்கம் வழங்கும் உதவி மிகவும் சொற்பமாகவும், போஷாக்குள்ள உணவு என்பது இவர்கள் அறியாத ஒன்றாகவும் பொதுவாக காணப்படுகின்றது.

முகாம்களில் நிலவும் சுகாதாரக் குறைபாடுகள், போஷாக்கற்ற உணவும், புழுக்கமும், நெருக்கமும் பல நோய்களுக்கு காரணிகளாகின்றன. ஆனால் இனியும் தொடர்ந்து உதவிகளுக்கு ஏதாவது பொதுஸ்தாபனங்களை நம்பியிருக்க முடியாது. எனவே இம்மக்கள் தமது தேவைகளை தாமே ஓரளவு பூர்த்திசெய்யக் கூடியதாக ஏதாவது ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். முக்கியமாக மூன்று வகையான தொழில் பிரிவுகளில் இம்மக்களை அடக்கமுடியும். அதாவது மீன்பிடி, விவசாயம், மற்றும் கூலிவேலைகள். மீன்பிடித்தொழிலில் பரிச்சயமான மீனவர்களுக்கு (வீச்சுவலை போன்ற) சிறுவசதிகள் செய்து கொடுப்பதன் மூலமாக ஓரளவு வருமானம் பெற உதவமுடியும். இதற்கேற்ற விதத்தில் வற்றாப்பளை நந்திக்கடல் ஓரளவு வசதியானதாக தென்படுகின்றது. விவசாயத்தொழிலை மேற்கொள்ள விரும்புவபர்களுக்கு ஒரு கூட்டுப் பயிர்ச்செய்கைத் திட்டத்தையறிமுகப்படுத்துவதன் மூலம் வசதிகள் ஏற்படுத்த முடியும். இதற்கேற்ப வசதியுள்ள நிலத்தை (முகாம்களுக்கு அண்மையில்) பெறுவது உடனடித் தேவையாயுள்ளது.

இவற்றைத்தவிர தென்னந்தும்புக்கைத்தொழில் அறிமுகப்படுத்தப்படுவது ஒரு சாத்தியப்பாடாகும். ஏனெனில் முல்லைத்தீவு மாவட்டம் தென்னைவளம் மிக்க ஒரு கரையோரப் பிரதேசமாகும். எனவே தும்புத் தொழிலுக்கான மட்டைகளைப் பெறுவதும் அவற்றை ஊறவிடுவதும் இலகுவானது. தென்னந்தும்பைக் கொண்டு கயிறு, தும்புத்தடிகள் போன்றன செய்யும் முறைகளில் பயிற்றுவிப்பதன் மூலம் இருபாலாருக்கும் வேலைவாய்ப்பை வழங்கமுடியும். (ஆனால் சந்தைப்படுத்தலில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்). ஆரம்பத்தில் சிறிய அளவில் முகாம்களில் மட்டைகளை கொடுத்து தும்புகளை விலைக்கு வாங்கி பின் இதை விஸ்தரிக்க முடியும். பின் வளர்ச்சிப்போக்கில் ஒரு தனியான தொழில் நிலையம் அமைப்பதும் சாத்தியமாகலாம். மேலும் சில பகுதிகளில் பிரம்பு வளர்ந்து காணப்படுவதால் இப்புற்களைக்கொண்டு கூடைகளையும் செய்யமுடியும்.

இனி கென்ட், டொலர் பாம்களில் சிங்களக் காடையரை குடியமர்த்துவதற்காக அதிலே ஏற்கனவே இருந்த தமிழ் குடும்பங்களை அரச கூலிகள் வெறித்தனமாக சுட்டுத் துரத்தியபோது ஓடிவந்த மக்களில் ஒருபகுதியினர் நெடுங்கேணியில் ஒரு நெசவுசாலையில் தஞ்சம் புகுந்துள்ளனர். இப்பதின் மூன்று குடும்பங்களில் பலருடைய ஆண் அங்கத்தவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. இவர்கள் அரசாங்கம் நிவாரணம் வழங்கும் என்று எதிர்பார்த்திருக்கிறார்கள். இந்த முகாமில் சுகாதார நிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மிக மோசமானது. இங்குள்ள மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவேண்டும். எதிர்காலத்தில் இவர்களுக்குரிய பொருளாதார வசதிகள் விவசாய நிலங்களில் ஏற்படுத்திக் கொடுக்கப்படலாம். ஏதாவது சிறு கைத்தொழில் பயிற்சி வழங்குதலும் ஊக்குவித்தலும் நல்ல, விளைவுகளை ஏற்படுத்தலாம்.

இன்னும் 4-11-84 அன்று இனவெறியரால் ஒதியமலை கிராம முன்னேற்றச் சங்கத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட 27 ஆண்களின் குடும்பங்களும் வேறு ஒதியமலையைச்சார்ந்த் குடும்பங்களும் தமது இயற்கைவளம் மிக்க பிரதேசத்தை விட்டு அநேகமாக பழம்பாசி எனும் கிராமத்தில் வேறு வீடுகளில் பலத்த கஷ்டத்தின் மத்தியில் குடியிருக்கிறார்கள். பகல் வேலைகளில் தமது நிலங்களுக்கும், வயல்களுக்கும், ஒளித்து, ஒளித்துச் சென்று வந்தாலும் எதிர்காலம் இதை சாத்தியமற்றதாக்கும் என்றே தெரிகின்றது. அன்னியர்களின் காலடிகள் இவர்கள் மண்ணிலிருந்து அழிந்து போகும் நாளே மீட்சியின் நாள். இம்மக்கள் வேறு விவசாய நிலங்களில் தனியாக குடியேற விரும்பின் அதற்கான வசதிகள் செய்யப்படவேண்டும். இக் கிராமத்தைச் சார்ந்த பிள்ளைகளில் கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது எனவே பழம்பாசியிலுள்ள பாடசாலையை வசதியானதாக மாற்றி ஒதியமலையைச் சார்ந்த மாணவர்களுக்கும் கல்வி வசதி செய்யப்பட வேண்டும். ஒதியமலைக்கருகில் உள்ள பெரியகுளம் எனும் கிராமத்திலுள்ள மக்களும் மிகவும் பயபிராந்தியுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இங்குள்ள வயோதிபப் பெண்கள் கூட வாகனச் சத்தங் கேட்டால் முள்வேலி பாய்ந்து ஓடுவதை பெரும்பாலும் காணலாம். இங்குள்ள பாடசாலையும் நடைபெறுவதில்லையாதலால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள படித்த இளைஞர்களால் இக்குறை நிவிர்த்தி செய்யப்படலாம். ஆனாலும் இப்பிரதேசமக்களும் அரசகூலிகளினால் துரத்தப்படக்கூடிய சூழ்நிலை நிலவுகின்றது.

இவற்றைத்தவிர கடந்தகால இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு வெளியேறிய பல மலையக குடும்பங்கள் வெவ்வேறு கிராமங்களில் பல்வேறு ஸ்தாபனங்களாலும், தனியாராலும் குடியேற்றப்பட்டிருக்கின்றார்கள். தண்டுவான், வெடிவைச்சகல், காட்டுப்பூவரசங்குளம், ஊஞ்சல்கட்டி, காஞ்சராமோட்டை போன்ற இடங்களில் மக்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் கீழ்மட்டத்திலுள்ளது சொந்தமான காணிகள் உள்ள இவர்களுக்கு பொதுவான தோட்டக்கிணறும், நீர் இறைக்கும் இயந்திரமும் பெற்றுக்கொள்ள முடியுமானால் நிலைத்திருந்த வாய்ப்புண்டு. இப்பிரதேசங்களில் நியாயவிலைக்கடை, மற்றும் பாலர் பாடசாலை போன்றன அமைக்கப்படுதல் கூடிய பலன் அளிக்கும்.

மொத்தமாக பார்க்குமிடத்து பல்வேறு பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து எமது மக்கள் உயிர்களைக் காக்க வெளியேறி அகதிகளாக மாறுகிறார்கள். குறிப்பாக மன்னார். முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் இப்பிரச்னை அதிகமாக உள்ளது. மிக அண்மையில் செட்டிக்குளம் எனும் பிரதேசத்திலுள்ள மக்கள் கூட பலவந்தமாக தமது நிலங்களிலிருந்து துரத்தப்படப்போவதாக செய்திகள் நிலவுகின்றன. இப்படியாக நமது எல்லை குறுகிக்கொண்டு வருகின்றது. நமது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பிரதேசம் பறிக்கப்படுகின்றது. தற்பொழுது

✻ தொடர்ச்சி 26-ம் பக்கம் பார்க்க.

□

### பாராட்டுகிறோம்

❋ குமுழமுனை என்னுமிடத்தில் 3 மாத முகாம் வாழ்க்கையின் பின் தமது வீடுகளுக்கு திரும்பியவர்களின் வீடுகளில் பல சுத்தப்படுத்தும் வேலைகள் காத்திருந்தன தமிழீழ மக்கள் விடுதலைக் கழக [P. L. O. T] நண்பர்களால் திடீரென சிரமதான அடிப்படையில் இவ் வேலை செய்யப்பட்டது. கழகத்தினரின் தேவையறிந்து செய்த சேவையை பராட்டுகிறோம்.

❋ முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு போஷாக்கற்ற உணவு வழங்கப்படுவதை அறிந்து தமிழீழ விடுதலைப் புலிகள் (L. T, T. E) அமைப்பைச் சர்ர்ந்த நண்பர்கள் தமது ஓய்வு நேரங்களில் குளங்களில் பெருமளவு மீன் பிடித்து, 6 பெரிய சாக்குகள் நிறைய கருவாடு முகாம்களுக்கு வழங்கினார்கள் புலிகளின் அர்ப்பணிப்பை பாராட்டுகின்றோம்

❋ முல்லை மாவட்டத்திலுள்ள பல்வேறு அகதிகள் முகாம்களிலும் குமுழமுனை, அளம்பில், செம்மலை பிரதேசங்களிலும் யாழ்—பல்கலைக் கழக மாணவர்கள் மேற்கொண்ட நிவாரண வேலைகளுக்காக அவர்களை பாராட்டுகிறோம்.

www.tamilarangam.net



# தென்னாசிய சூழ்நிலையில் தமிழீழப் போராட்டமும், சோஷலிசத்திற்கான பாதையும்

தமிழீழ செம்படை - *RFTE*

**உலகின்** சகல பிராந்தியங்களும் ஒரே மாதிரியான சமூக—பொருளாதார— அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை. மாறாக பல்வேறாக மாறுபட்டுக் காணப்படுகிறது. முதலாளித்துவ-ஏகாதிபத்திய கொடுமைகள் ஒரு புறமும், சோஷலிச - கம்யூனிச மேம்பாடு மறுபுறமும் சமகால நிகழ்வுகளாக உலக அரசியலை நடத்துகின்றன. தென்னாசிய சூழ்நிலையானது முதலாளித்துவ ஜனநாயக அரசுகள் ஏகாதிபத்திய பிடியினுல் படிப்படியாக அதன் பிடிக்குள் சென்று முதலாளித்துவ சர்வாதிகார நிலைக்கு செல்வதனையே கூடுதலாக பிரதிபலிக்கின்றது. இதன் மத்தியில் நிகழ்ந்து வரும் தமிழீழப் போராட்டத்தினை பற்றியும், சோஷலிசப் புரட்சியால் சோஷலிசப் பாதையில் எவ்வாறு இட்டுச் செல்லப்படுகின்றதென்பதையும் ஆராய்வோம்.

தமிழீழப் போராட்டத்தினது புற நிலைகளானது இந்தியாவை மையமாகக் கொண்டு நிகழும் ஏகாதிபத்தியங்களின் போட்டா போட்டி, இந்து சமுத்திர ஆளுகைக்காக நிகழும் வல்லரசுகளின் போட்டி மற்றும் சோஷலிசத்தினை பரவ விடாது தமது நலன்களைப் பேண முயலும் முதாளித்துவ ஆட்சி என்பவற்றை உள்ளடக்கிய அரசியலாக காணப்படுகிறது. இதன் மத்தியில் நிகழும் எமது போராட்டமானது ஸ்ரீலங்கா சிங்கள பேரினவாத அரசுக்கு மட்டும் எதிரானதாக அமையாது, ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரானதாக அமைகிறது. எனவே எமது போராட்டமானது தீவிரமானதாகவும், பலம் மிக்கதாகவும் அமைவதுடன் உலக முற்போக்கு சக்திகளினது உதவியினைப் பெற்று முன்னேற வேண்டிய அவசியத்தினையும் காட்டுகிறது. இந் நிலையில் நாம் முக்கியமாக அவதானிக்க வேண்டியது, இதனை காரணமாக வைத்து எம் மீது மேலாதிக்கத்தை திணிக்க முயலும் (இந்தியா உட்பட) சக்திகளை இனங்கண்டு அதற்கேற்ப இயங்குதலாகும். எமது போராட்டங்களுக்கு முழு ஆதரவு அளிப்பது போல நடந்து, ஸ்ரீலங்கா, தமிழீழப் பொருளாதாரத்தினை நலிவுறச் செய்வதன் வாயிலாக தமது மேலாதிக்கத்தை நிறுவ முயலும் சக்திகளுடன் எமது கூட்டினை நாம் பரிசீலனை செய்ய வேண்டியதும் அவசியமாகும். கூடுதலான உதவியினை சடுதியாக வழங்கி அவ்வியக்கத்தினை அதீத வளர்ச்சியுறச் செய்வதன் வாயிலாக அதனை அழிப்பதும், தமிழீழ மக்கள் மத்தியில் சந்தேக உணர்வுகளை வளர்ப்பதற்கும் இச் சக்திகள் முயன்றதனையும் தெளிவான கண்ணோட்டத்தில் உள்ளோர் மறுக்க முடியாத ஒன்றாகும்.

தமிழீழப் போராட்டமானது இரு முக்கிய இலட்சியங்களை வைத்து நிகழ்த்தப்படுகிறது. பெருந்தேசிய இனவாத ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை பெறுதலும், தமிழீழத்திலுள்ள முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து தொழிலாள பாட்டாளி வர்க்கம் விடுதலை பெறுதலையும் இலட்சியங்களாகக் கொண்டுள்ளன. எனவே தேசிய விடுதலைப் போராட்டமானது தொழிலாள பாட்டாளி வர்க்க விடுதலையையும் இணைத்ததாக அமைத்து நிகழவேண்டுமாயின் அது ''சோஷலிசப் புரட்சி'' ஒன்றால் தான் நிகழ முடியும். ஆயுதப் போராட்டத்தில் இறங்கிய விடுதலை இயக்கங்களே சோஷலிசப் புரட்சியை முன்னெடுத்துச் செல்கின்றன. இந் நிலையில் பாராளுமன்ற பிற்போக்குவாத அரசியல் தலைமையானது மக்களிடம் சோஷலிசம் பற்றி தவறான கண்ணோட்டங்களை வழங்குவதன் வாயிலாக தமது வர்க்க நலனைப் பேண முதலாளித்துவ ஜனநாயகத்தை வளர்க்க முயல்கிறது. இந் நிலையில் எமது முதலாவது நடவடிக்கை ''சோஷலிசம்'' பற்றிய கருத்துக்களை மக்கள் மத்தியில் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் ஆழமாகவும் புரிய வைப்பதே பிரச்சார நடவடிக்கைகள் மூலம் அரசியல் தெளிவை ஏற்படுத்தி அரசியல் அறிவினை வளர்ப்பதே முக்கியமான வேலைத் திட்டமாகும். இவ் வேலைப்பாட்டிற்காக கெரில்லாக்களோடு மாணவர்கள், கலைஞர்கள், அரசியலாளர்கள் போன்றோர் சேர்ந்துழைக்க முடியும். விடுதலையின் பின்னரே சோஷலிசம் பற்றியதான கருத்துக்களை, செயல்திட்டங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வகுப்போம், எமக்கு முதலில் தேவை தேசிய விடுதலையே என்ற கோசங்கள் சில இயக்கங்களால் எழுப்பப்படுகின்றன. இவை அவற்றினது தெளிவற்ற அரசியல் நிலைப்பாட்டையே எடுத்துக் காட்டுகின்றன.

தமிழீழப் போராட்டமானது சில விடுதலை ஸ்தாபனங்கள் தமிழீழத்தின் அக நிலை, புற நிலைகளைப் பற்றி ஆராயாமல், கெரில்லாப் போராட்டம் பற்றிய தெளிவுடன் கூடிய அறிவில்லாமல் வெகுசன ஆயுதக் கிளர்ச்சி மூலமே முன்னெடுப்போம் என கூறிவருகின்றன. ஆனால் வெகுசன ஆயுதக் கிளர்ச்சியே தமது பாதை என்ற சிலர் இன்று தமிழீழத்தின் அக நிலை, புற நிலை உணர்ந்து, கெரில்லாப் போரினது உண்மைகளைப் புரிந்து கெரில்லாப் போர்முறைக்கு மாறிவருகின்றமை அவர்களிடையே ஏற்பட்ட அரசியல் அறிவினையே சுட்டி நிற்கின்றது. பலம் பொருந்திய சிறிலங்கா இராணுவத்துடன் எதிர்த்து நின்று எமது சுதந்திரத்தை பெறவேண்டுமாயின் கட்டுப்பாடும், ஒழுக்கமும், வீரமும் செறிந்த மறைவாக இயங்கும் கெரில்லாப் படைகளாலேயே சாதிக்க முடியும் என்ற உண்மை இப்போது வெட்டவெளிச்சமாக மக்கள் உணர்ந்துள்ளனர். கெரில்லா யுத்தங்களினால் இன்று எதிரி எமது பிரதேசத்தில் எப்பொழுதும் அச்சத்துடன் நடமாடி வருகிறான். அவனது சுதந்திரமான நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது சிலர் கூறிவருவது போல் சகல மக்களும் ஆயுதந்தரித்து, ஒரே முறையில் இறுதிப் போரினை (மரபு வழிப்போர்) நடத்துவது என்பது அவர்களினது கற்பனாவாத புரட்சி வாதத்தினையே காட்டுகின்றது. ஒவ்வொரு கெரில்லாவும் இறுதிப் போரிலே மக்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கி வழி நடத்திச் செல்வான். அந்நிலையில் அது மக்கள் இராணுவமாக அமைவதனை காணலாம். மக்கள் புரட்சி என்பது எல்லோரும் ஆயுதந் தரித்தலை குறிப்பதல்ல, ஆனால் மக்கள் போராடுதலையும், மக்கள் எல்லோரும் அரசியல் அறிவினை வளர்த்தெடுப்பதன் வாயிலாக தாபன ரீதியிலான கட்டுக்கோப்புக்குள் ஒற்றுமைப்படுவதன் வாயிலாகவே மக்கள் புரட்சி நடத்தப் படமுடியும், வெற்றியளிக்க முடியும். எனவே சோஷலிசப் புரட்சியில் அடுத்த கட்டமாக கெரில்லாக்கள் மக்களை அரசியல் மயப்படுத்தி தாபன ரீதியில் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடுவர். தேசிய விடுதலைப் போரினைப் பொறுத்தவரை முதலாளிகளும் ஒரு உந்துசக்தியாகவே கணிக்கப்படல் வேண்டும். ஆனால் நம் தெளிவான, ஆழமான, பலமான சோஷலிச அரண்களை நிறுவுவதன் வாயிலாக இவர்களால் நாளை ஏற்படக்கூடிய பிரச்சனைகளைத் தவிர்க்கலாம் அதாவது முதலாளித்துவ—ஏகாதிபத்திய வர்க்க கருத்துக்களை தொழிலாளவர்க்க அணிக்குள் புகுந்தும் திரிபுவாதத்தினை முறியடித்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் எதிரிகளை விரட்டியடித்து தாபிப்பதன் வாயிலாக சோஷலிச நிர்மாணத்தினை படிப்படியாக கட்ட முடியும். முதலாளித்துவ சுரண்டல் முறையையும், அதனுடன் கூடவே தேசிய ஒடுக்குமுறை அமைப்பையும் ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டு, தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் அனைத்து மக்களின் நெருக்கமான ஒற்றுமையை தமிழீழத்தில் ஒரு சோஷலிசப் புரட்சியினால் தான் உத்தரவாதம் செய்ய முடியும்.

கெரில்லாக்கள் நிறைந்த இராணுவத்தினை அரசியலே வழிநடத்தும். இந்த அரசியல் தலைமையை தொழிலாள—பாட்டாளி வர்க்கம் ஏற்பதன் வாயிலாகவே எமது போராட்டம் பேரினவாத ஒடுக்குமுறைக்கும், நிலப்பிரபுத்துவ—முதலாளித்துவ பொருளாதார முறைகளுக்கும் எதிராகவும் இவ்விரு போராட்டங்களும் ஒன்றாக எடுத்துச் செல்ல, சோஷலிசப் புரட்சிக்கு தொழிலாள—பாட்டாளி வர்க்கமே தலைமை தாங்க முடியும். இதில் பணக்காரர் போல் இருந்து ஏழையாக வாழும் மத்திய தர வர்க்கமும் பங்கெடுக்கலாம். எனவே இவர்களினது தலைமையே தேசிய விடுதலைப் போரினை சோஷலிச இலக்கு நோக்கி நகர்த்த முடியும். எனவே கெரில்லாக்கள் அடங்கிய இராணுவப்பிரிவானது அரசியல் திட்டங்களை நிறைவேற்றிச் செல்லும் அதே வேளையில், அரசியல் பிரிவானது தொழிலாள வர்க்கத்தினை ஒற்றுமைப்படுத்தி, தாபனமயப்படுத்தி, ஒன்றுபட்ட ஒரு பெரும் சக்தியாக திரட்டி சோஷலிசத்திற்கான பாதையில் எமது போராட்டத்தினை நகர்த்திச் செல்வது ஒரே நேரத்தில் ஒன்றில் ஒன்று பாதிப்பில்லாது நிகழ்த்த முடியும்.

தேசிய விடுதலைப் போரினை முன்னெடுத்துச் செல்லும் போது எதிரியிடமிருந்து விடுபடல் வரை நாம் மேற்கொள்ளும் சோஷலிசத்திற்கான பாதையை பின்வரும் கட்டங்களாக பிரிக்கலாம்.

www.tamilarangam.net

1. மக்களுக்கு சோஷலிச அறிவினை வளர்த்தல்.

2. தொழிற்சங்க இணைப்பு, குழுக்கள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் தொழிலாள வர்க்கத்தினை ஒற்றுமைப்படுத்தி, அரசியல் மயப்படுத்தி, தாபன மயப்படுத்தல்.

3. தாபன ரீதியில் அமைந்த தொழிலாள வர்க்கத் தலைமையில் புரட்சியினை முன்னெடுத்தல்.

எதிரியிடமிருந்து நாம் விடுதலை பெற்றவுடன் சோஷலிச நிர்மாணமானது படிப்படியாக கட்டியெழுப்ப முடியும். மார்க்ஷிஸம் விவாத விஞ்ஞானமல்ல, உலகை மாற்ற மனிதனுக்கு உதவும் சமூகவிஞ்ஞானமாகும். முதலாளித்துவம் அழியுங்கட்டம் எனவும், அதன் ஸ்தானத்தில் சோஷலிசம் தோன்ற வேண்டும் என்பதை அறிந்தால் மாத்திரம் போதாது இந்த மாற்றம் தானாக ஏற்படாது என்பதையும், வெறும் பொருளாதார மாற்றங்களால் மாத்திரம் இது ஏற்படாது என்பதையும் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும். மனித செயலின் வாயிலாகவே ஒரு உற்பத்திமுறையிலிருந்து இன்னொரு உற்பத்தி முறைக்கு மனித சமூகம் தாவ முடியும். இதற்கான செயலுக்கு வேண்டிய அறிவினை மார்க்ஷிஸம் அளிக்கிறது இது தொழிலாளி வர்க்கத்தினாலேயே முடியும் என்பதை உணர்ந்த மார்க்ஸ் "தங்கள் பொருளாதார அரசியல் சலுகைகளில் மாற்றம் ஏற்படுவதைப் பலாத்காரமாகத் தடுக்கும் ஆளும் வர்க்கத்திற்கு எதிராகத் தொழிலாளி வர்க்கம் பலாத்கார வழிகளை மேற்கொள்ள வேண்டும்" என்றார். இதனை நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

---

( 15-ம் பக்கத் தொடர்ச்சி )

## தோட்டத் தொழிலாளரைப்...

III. இலங்கை "சுதந்திரம்" பெற்ற 1948-ம் ஆண்டில் மொத்தம் 993 தோட்டப் பாடசாலைகள் இருந்தன. 1981 ஏப்ரல் மாதத்தில் இதன் தொகை 639 ஆகக் குறைக்கப்பட்டு விட்டது. இருக்கின்ற பாடசாலைகள் கூட இன்று இழுத்து மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த அரசாங்கம் பதவியேற்ற பின்னர் ஆகக் குறைந்தது 86 மலையகப் பாடசாலைகளாவது மூடப்பட்டுள்ளன. இவற்றில் பத்தாம் வகுப்புவரை பாடம் நடத்தப்பட்ட பாடசாலைகளும் அடங்கும். ஆசிரியர் இல்லை என்ற சாட்டிலே பல பாடசாலைகள் பல ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளன.

IV. தோட்டப்புறப் பாடசாலைகளில் 5-ம் வகுப்பு வரை மாத்திரமே படிப்பிக்கப்படுகின்றது. அநேகமாக ஒரு ஆசிரியரே முழு வகுப்பிற்கும் பாடம் நடத்துவார். எண், எழுத்து, வாசிப்பு மூன்று பாடங்களுடன் ஒரு சமயமும் போதிக்கப்படும். 1982 மார்ச்சில் வலப்பனை தேர்தல் தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின்படி அங்கு மாத்திரம் இத்தகைய 1 ஆசிரியர், 5 வகுப்பறை, பாடசாலைகள் 8 இருந்தன. அதில் ஒரு ஆசிரியருக்கான மாணவர் விகிதம் 113·25 ஆக இருந்தது. இந் நிலையில் அந்த ஆசிரியர் 5 வகுப்புகளைச் சார்ந்த 113 பிள்ளைகளுக்கு படிப்பிக்க முடியுமா? முடியாது. வேண்டுமானால் வெளியேயுள்ள தேயிலைச் செடிகளை பிள்ளைகள் சேதம் செய்யாமல் கண்காணிக்கலாம். இந்த ஒரு ஆசிரியர் லீவில் இருக்கும் போதெல்லாம் பாடசாலை மூடப்படும். இன்று மலையகத்தில் உள்ள பாடசாலைகள் பெயரளவிலாவது இயங்க வேண்டுமானால் அவசரமாக 3500 ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஆனால் அரசாங்கத்தின் மனோபாவத்தைத்தான் 402 ஆசிரிய நியமனத்தை 6 ஆண்டு காலமாக இன்னமும் கொடுத்து வருவதில் இருந்து அறிய முடிகிறதே.

IV. 5ம் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்பில் படிக்கும் அதிர்ஷ்டம் மிகச் சில தொழிலாளரின் பிள்ளைகளுக்கே கிடைக்கும். ஏனெனில் 5-ம் வகுப்புக்கு மேற்பட்ட பாடங்களை நடத்தும் பாடசாலைகள் பெரும்பாலும் நகரங்களிலேயே உள்ளன. சில தோட்டங்களில் இருந்து 6-ம் வகுப்பு படிப்பதற்கு 10 முதல் 25 மைல் வரை பிரயாணம் செய்ய வேண்டும். 10-ம் வகுப்புக்கு மேல் படிக்க வேண்டுமானால் 30 மைல் கூட்டிப் பிரயாணம் செய்ய வேண்டும். இவ்வளவு தூரம் அனுப்பி தமது பிள்ளைகளைப் படிப்பிக்கும் பணப்பலம் தோட்டத்தொழிலாளரிடம் கிடையாது.

VI. இலங்கையில் மொத்தம் 67 மத்திய மகா வித்தியாலயங்கள் உள்ளன. ஆனால் தோட்டத்தொழிலாளரின் பிள்ளைகளுக்கென ஒரு மகாவித்தியாலயந் தானும் கிடையாது. — தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புரட்சியில் இளைஞர்கள்

மனிதகுல விடுதலைப் போராட்டங்களின் வரலாறு இளம் தலைமுறையினரின் வரலாறேயாகும். விடுதலையையும் சமூக நியாய ஆதர்சத்தையும் பெறமுயல்வது இவர்களுக்கு இயல்பானது, இவர்கள் புரட்சிக் குறிக்கோளுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். அதற்காக வாழ்ந்தார்கள். அதற்காக உயிரையும் மகிழ்ச்சியுடன் வழங்கினர்கள். ஆனால் இவர்களும் பந்தம், பாசம், காதல், குடும்பம் என்ற உணர்ச்சிகளினால் குலுக்கப்பட்டார்கள்; ஆனால் அவைகள் தங்கள் போராட்ட உணர்வை மீறி எழ அவர்கள் அனுமதித்ததில்லை. அவர்களில் சிலர்பற்றிய விபரங்கள்:

### ஃபெலிக்ஸ் எத்முந்தோவிச் த்ஸெர்ஜீன்ஸ்கி:-

ரஷ்ய புரட்சியின் (ஜாருக்கு எதிரான) இரும்பு மனிதர் என்று அழைக்கப்பட்டவர். பதினொரு ஆண்டுகளை அதாவது தம் வாழ்நாளின் கால் பகுதியை ஜாரின் சிறைச்சாலைகளிலும், சைபீரிய சிறைக்குடியிருப்புக்களிலும் காவல் சிறைகளிலும் கழித்தார். சிறையிலிருந்து தப்பி மறைமுக புரட்சி வேலைகளில் ஈடுபட்டார். இவர் தம் மனைவி சோபியாவிற்கு அனுப்பிய கடிதம் இது:

என் அன்பே!

நான் போராட்ட நெருப்பின் நடுவில் இருக்கிறேன். நம் வீட்டைக் காக்க வேண்டியிருப்பதால் ஓய்வின்றிப் போராடும் படை வீரனின் வாழ்க்கை என்னுடையது. தன்னவர்களையும் தன்னையும் பற்றி நினைக்க நேரம் இல்லை. வேலையும் போராட்டமும் கடுமையானவை. ஆனால் இந்தப்போராட்டத்தில் என் இதயம் உயிர் உள்ளதாக முன்பு இருந்தது போன்றே இருக்கின்றது. என் நேரம் எல்லாம் இடையறாத வேலைக்கே சரியாய் போகிறது.

என் எண்ணம் இரக்கம் அற்றவனாக இருக்கும் படி என்னைக் கட்டாயப்படுத்துகிறது, நோக்கம் நிறைவேறும் வரை விடாது போராடுவது என்று உறுதி பூண்டிருக்கிறேன்.

பகைவர்களின் முற்றுகை வளையம் எங்களை மேலும் மேலும் வலுவாக இறுக்குகின்றது. எங்கள் இதயத்தை நெருங்குகிறது. ஒவ்வொரு நாளும் நாங்கள் முன்னிலும் உறுதியான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டி வருகிறது. நான் பீரங்கிப் படையின் முன் வரிசையிடத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறேன். போராட வேண்டும். கடுமையான நிலைமையின் ஆபத்து முழுவதையும் திறந்த கண்களுடன் நேரிட்டு நோக்க வேண்டும். நான் இரக்கம் அற்றவனாக இருக்க வேண்டும் என்பது என் திட சங்கற்பம்....

உடல் நோக்கில் நான் களைத்துப் போனேன். ஆனால் நரம்புச்சக்தியால் தாங்கிக் கொண்டிருக்கிறேன். உளம் சோர்வது என் இயல்பிற்கு புறம்பானது. வேலை அறையை விட்டு நான் அநேகமாய் வெளியே போவதே இல்லை. இங்கே வேலை செய்கிறேன். இங்கேயே ஒரு மூலையில் படுதாவுக்குப் பின் என் கட்டில்.

உன்னையும் யாஸிக் (மகன்) கையும் பற்றி எனக்கு எழுத உனக்கு ஒருவேலை சந்தர்ப்பம் வாய்க்கும் என நினைக்கிறேன்.

உங்கள்
ஃபெலிக்ஸ்

### உல்லுபீ புய்னக்ஸ்கி:-

இவர் பதினைந்தாவது வயதில் பொல்ஷிவிக் நிறுவனத்தில் வேலை செய்யத் தொடங்கினர் மாபெரும் அக்டோபர் புரட்சியும், உள்நாட்டுப் போரும் நடந்த ஆண்டுகளில் இந்தக் கம்யூனிஸ்ட் இளைஞர் காக்கேசியக் குடியரசுகளில் ஒன்றான தாகிஸ்தானில் கட்சி நிறுவனத்தின் தலைவராக எல்லோராலும் மதிக்கப் பெற்றார். ருஷிய கம்யூனிஸ்ட் கட்சியில் மறைமுக மாவட்டக் கமிட்டியையும், தாகிஸ்தான் ஆலோசனைச் சபையையும் 1919-ல் புய்னக்ஸ் அமைத்தார். 8000 படையினர் கொண்ட கிளர்ச்சி செஞ்சேனை சட்ட விரோதமான நிலைமைகளில் உருவாயிற்று புரட்சி எதிர்ப்பு அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால் உள

✲ [தொடர்ச்சி 28-ம் பக்கம் பார்க்க]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எல்சல்வடோர் – தொடரும் போராட்டம்

— ஜோய் —

**வரலாற்றுப் பின்னணி:-**

சுமார் 49 இலட்சம் மக்களைக் கொண்ட மிகச் சிறிய நாடு எல்சல்வடோர். கோப்பி இதன் பிரதான ஏற்றுமதிப் பயிர். மிகவும் குறைந்தளவான சல்வடோரியர்கள் வியாபாரம் செய்து அல்லது அரசியலில் பிரபல்யம் பெற்று செல்வந்தர்களாக இருக்கின்றார்கள். ஏனையோர் லத்தின் அமெரிக்க நாடுகளுக்குப் பொதுவான வறுமையில் வாடுகின்றனர். பதினான்கு குடும்பங்கள் நாட்டின் நிலத்தைப் பங்குபோட்டுள்ளன. கோப்பியை ஏற்றுமதி செய்கின்ற அதே வேளை முடிவுப் பொருட்களில் பெரும்பாலானவை இறக்குமதியே செய்ய வேண்டியுள்ளது.

சல்வடோர் ஏனைய நாடுகளைப்போல் காலனித்துவத்திற்கு உட்படவில்லை. 1913—1927-ம் ஆண்டு வரை மெலன்டஸ் குடும்பக்காரரின் ஆட்சி நிலவியது. 1913-ம் ஆண்டு மாட்டினஸ் எடபார் ஆட்சிப்பீடமேறினார். இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் நேச நாடுகளை ஆதரித்தமையால் கோபபி நலல விலைக்குப் போயிற்று இதனால். கோப்பி உற்பத்தியாளரின் நலன் பேணுவதில் கவனம் செலுத்தினர். 1944-ல் நிகழ்ந்த சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து நாட்டில் கலகங்கள் தோன்றின. இதனால் 1948-ல் இளம் இராணுவ வீரர் சிலர் ஆட்சியைக் கைப்பற்றினர். 1956-ல் ஜனாதிபதியாக வந்த கலமுஸ் அடக்குமுறை நிர்வாகத்தைக் கைக்கொண்டார். கம்யூனிசத்தின் பால் கவரப்பட்ட இளைஞர்களும் புத்தி ஜீவிகளும் இவரது ஆட்சியை 1960-ல் கவிழ்த்த போதும் மீண்டும் 1961-ல் வலதுசாரிகளைக் கொண்ட Junta பதவியேற்றது. இதில் ஒருவரான ரிவேரா என்பவர் 1962-ல் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டு அடுத்த 5 வருடங்களுக்கு உறுதியான ஆட்சி நிலவியது. 1967-ல் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஹேர்னன்டஸ் ஆட்சிப் பொறுப்பேற்றதும் மீண்டும் அமைதி சீர்குலைந்தது. ஏழை சல்வடோர் மக்கள் ஹொண்டுராஸிற்குத் தப்பியோட வேண்டியிருந்தது. 1969-ல் சல்வடோருக்கும் ஹொண்டுராஸிற்கும் இடையே நடந்த உதைப்பந்தாட்டப் போட்டியைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தினால் இரு நாடுகளுக்குமிடையே யுத்தம் மூண்டது. அமெரிக்க இராச்சியங்களின் அமைப்பினால் இப்போர் நிறுத்தப்பட்டது. 1972-ல் National Conciliation Party தேர்தலில் வென்றது. உண்மையில் இவ்வெற்றி இராணுவத்தினதும், நில உடமையாளரதுமே எனக் கருத வேண்டிய அளவிற்குத் தேர்தலில் அவர்கள் எடுத்த பங்கு இருக்கிறது. தொடர்ந்து மத்திய அமெரிக்காவில் அமெரிக்காவின் மிகப் பெரிய கைத்தொழில் நிலையமாக எல்சல்வடோர் மாறிவந்தது. மத்திய அமெரிக்காவில் உள்ள அதிக கைத்தொழில், உருக்குத் தொழில், தளபாடம், சீமெந்து உற்பதிச் சாலைகள் நிறைந்த நாடு சல்வடோர். ஆள்வீத வருமானம் 750 டொலராக இருக்கிறது. 1973/77 காலப்பகுதியில் 8% மக்கள் செல்வதிலே 50%ஐப் பெற்றனர். 30% மக்கள் 2.7 டொலருக்கும் குறைவான தொகையையே மாதமொன்றிற்கு வருமானமாகப் பெற்றனர். மேலும் 1960-க்கு முன்னர் அமெரிகக போக்குவரத்து தொலைத்தொடர்பு போன்றவற்றிடையே முதலிட்டிருந்தது. 1960க்கும் 70க்கும் இடையில் கைத்தொழில் ரீதியான முதலீடுகளை மேற்கொண்டது. எல்சல்வடோரில் கிடைக்கப்பெற்ற மலிவான உழைப்பே இதற்குப் பிரதான காரணம். பெருமளவிலான அமெரிக்க முதலீடுகள் அமெரிக்க தலையீட்டுக்கு வழி சமைத்தது.

எழுபதுகளில் ஏற்பட்ட நிலைமைகளால் ஆட்சிக்கு வந்த பல்வேறு குழுக்களைத் தொடர்ந்து 1979 ல் அமெரிக்க உதவியுடனான இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு நடந்தது. அதைத் தொடர்ந்து தற்போதய ஜனாதிபதியான நெப்போலியன் ஜோஸ்டுவாடே மககளது தெரிவின்றியே இராணுவ நிர்வகத்தின் ஒத்துழைப்புடன் ஜனாதிபதி ஆனார். புரட்சிகர சக்திகளின் வளர்ச்சியினால் சுதந்திர தேர்தல் நடாத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி இவ் வருடம் (1985) மார்ச் 25 தேர்தலில் ஆறு வேட்பாளர் போட்டியிட்ட போதும் எவருமே 50% வாக்கினைப் பெறவில்லை. இதனைத் தொடர்ந்து மே 13-ல் நடந்த தேர்தலில் டுவாடே 53.6% வாக்குகளைப் பெற்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனாதிபதி ஆனார். முக்கிய எதிர்க்கட்சி வேட்பாளர் பிரான்ஸிஸ் கோஜோஸ் கரேரா C. I. A யினால் பணம் கொடுக்கப்பட்டு தேர்தலில் இருந்து வாபஸ் வாங்கும்படி கோரப்பட்டார். இவ்வகையான தேர்தல் முறைகேடுகளுடனும் ஆயுதப்படையினரின் அத்துமீறல்களுடனும் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. ஆயினும் மக்களது பிரச்சனைகள் தீர்ந்து விடவில்லை. இடதுசாரி கெரில்லாக்களும் தம் தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

**எல்சல்வடோரில் புரட்சிகர இயக்கங்கள்:-**

1932-ல் நாட்டில் பொருளாதார, அரசியல் சீர்திருத்தம் வேண்டி பரபண்டே மார்ட்டி என்ற இடதுசாரி போராட்டம் நடத்தினர். எனவே இவரது பெயரைக் கொண்டதாகவே இன்றைய கெரில்லா அணி விளங்குகின்றது. சல்வடோரில் பல புரட்சிகர அமைப்புக்கள் காணப்பட்ட போதிலும் Forabowndo Marti National Liberation Front (Fmln அல்லது Fmnlf) என்பதே முண்ணணி இயக்கமாக உள்ளது. தற்போது பல புரட்சிகர அமைப்புக்கள் FMLN உடன் இணைந்தோ அல்லது ஆதரவளித்தோ வருகின்றன. 1979க்குப் பின்னர் முனைப்புற்ற இவர்களின் போராட்டம் ஆட்சியாளரின் கடுமையான அடக்குமுறைக்குள்ளாகி 1983 வரையுமான நான்கு ஆண்டுகளில் 40,000 மரணங்களுடன் இன்று மத்திய அமெரிக்கா கொந்தளிக்கும் ஒரு பிரதேசமாக மாறியுள்ளது. சல்வடோரிய புரட்சிகர அமைப்புகளை விளங்கிக் கொள்வது சற்று சிரமமானது ஏனெனில் பல்வேறு தத்துவ, போராட்ட வழிமுறைகளில் வெவ்வேறான போக்குகளை கொண்டிருப்பதே இதற்குக் காரணம். ஆயினும் இவற்றை அவதானமாக விளங்கிக் கொள்வது அவசியமாகின்றது.

பரபண்டே மார்ட்டியினால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 20000—30000 மக்களது கொலைகளுடன் முடிவுற்றது. நாட்டில் பிரச்சனைகளும் அதிகரித்தது வந்தன. 1961-ல் 30000 ஆக இருந்த நிலமற்ற ஏழை விவசாயிகளின் எண்ணிக்கை 1971-ல் 1,12,000 ஆக அதிகரித்தது. மொத்த சனத்தொகையில் 8% ஆனோர் மொத்த செல்வத்தில் 50% பெறுகின்ற அதே வேளை 30% மக்கள் நாளொன்றுக்கு 3 டொலரிலும் குறைவான தொகையையே வருவாயாகப் பெற்றனர். இதனால் 1960 இன் பிற்பகுதியில் புரட்சிகர இயக்கங்கள் குறிப்பிடத்தக்க பலத்துடன் வளர்ச்சியடைந்துள்ளது. 1967-ல் சமூக ஜனநாயக வாதிகளால் தேசிய புரட்சிகர இயக்கம் (MNR) ஆரம்பிக்கப்பட்டது. 1968-ல் தடைசெய்யப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் சட்ட ரீதியான அமைப்பான தேசிய ஜனநாயக சங்கம் (UDN) ஆரம்பிக்கப்பட்டது. இவற்றில் குட்டி முதலாளி வர்க்கத்தினரும் அங்கம் வகித்தமை குறிப்பிடத்தக்கது. 1970-ல் தொழிற்சங்க வாதிகள் இருவர் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தேசிய ஜனநாயக சங்கத்தின் போராட்ட தந்திரங்கள் குறித்து எழுந்த சர்ச்சையால் ஆயுதந்தரித்த ஒரு பிரிவினர் பரபண்டே மார்ட்டி மக்கள் விடுதலைப் படையை (FPL—FM) அமைத்தனர்.

1972 ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து நடைபெற்ற மோசடிகளின் பின்னர் ஏற்பட்ட சதிப் புரட்சி மூலம் Genmalina என்பவர் அதிகாரத்தைக் கைப்பற்றினர். இவரால் கடுமையான அடக்குமுறைச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டமையால் புரட்சிகர மக்களின் இயக்கங்களிடையே ஒருங்கிணைப்பு ஏற்பட வழி பிறந்தது. 1974-ல் பல தொழிலாளர்கள், விவசாயிகள் மாணவர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து, ஒருங்கி

---

✲ இறந்து போன பெண்ணே!

நூறு, நூறுயிரம் பெண்கள்

உன் வழி தொடர்வர்!

பெண்களின் பங்கின்றி எந்தவொரு விடுதலைப் போராட்டமும் வெற்றி பெற்றதாக வரலாறில்லை. தனது இளவயதிலேயே தமிழீழப் போராட்டத்திற்காக தன்னை அர்ப்பணித்துப் போராடிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த வதனி (சோபா) - யாழ்ப்பாணம்- 3-5-85 அன்று நடந்த காரைநகர் கடற்படைத் தளம் மீதான தாக்குதலின் போது வீரமரணம் அடைந்தார். ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆண், பெண் என்ற பாகுபாடு இல்லாமல் சகலரும் பங்குபற்ற வேண்டும் என்ற உணர்வுடன் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, எதிரியுடனான மோதலில் பலியான முதல் பெண் போராளி ஆவர்.

இவருக்கு எமது கௌரவங்களும், அஞ்சலிகளும்.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணைந்து மக்கள் நடவடிக்கை முன்னணி நிறுவப்பட்டது. 1975-ல் நடைபெற்ற ஊர்வலம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகம் மேலும் பல மக்கள் அமைப்புக்கள் ஒன்று சேர வழிவகுத்தது. புரட்சிகர மக்கள் அமைப்பு (BPR) இதன் மூலம் உருவானது. ஆயுதம் ஏந்திய இயக்கங்களிடையே இது இராணுவ ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்ருகும். இதே காலப்பகுதியில் புரட்சிகர மக்கள் இராணுவம் (ERP) தேசிய எதிர்ப்பு ஆயுதப் படைகள் (FARN) ஆகியன ஆயுதப் போராட்டத்தில் பரபண்டே மார்ட்டி மக்கள் விடுதலைப் படையுடன் இணைந்தன.

1979-ல் சதிமூலம் முன்னுள் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜெனரல் ஹம்பேட்டா ரொமேரோ என்பவர் ஜனுதிபதி ஆனர். இவர் மக்கள் அமைப்புக்கள் மீது மேலும் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டார். சந்தேகத்தின் மீது கைது செய்தல், காணுமற் போதல் என்பன மிக அதிகளவில் இடம்பெற்றன. பொது ஒழுங்குச் சட்டம் ஆயுதப்படைகள் இச் செயல்களில் ஈடுபடுவதைத் தடை செய்தது. ஆனுல் தீவிர வலதுசாரி மரணப்படையான White warriors union னும், The Anti Communist Army யும் கிராமப்புறங்களில் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட அனுமதிக்கப்பட்டன. கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதம் உலக அபிப்பிராயத்தை அமெரிக்காவிற்கு எதிராகக் திருப்பி விட கார்ட்டர் நிர்வாகம் எல்சல்வடோருக்கான இராணுவ, பொருளாதார உதவிகளை நிறுத்தியது. இதனுல் சல்வடோரிய தொழிலதிபர்களும், நிலச்சுவாந்தவர்களும் நாட்டைவிட்டோட, பொருளாதாரம் மேலும் சிதைவடைந்தது.

1979 அக்டோபர் 15-ல் அமெரிக்க சார்புடைய சில இளம் இராணுவ உத்தியோகஸ்தர்களால் பதவியிறக்கப்பட்ட ரொமேரோவும் அவரது ஆலோசகர்களும் நாட்டைவிட்டு வெளியேறினர். புதிய ஆட்சியாளர் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் வகையில் மனித உரிமைகளை மதிக்கப் போவதாக அறிவித்தனர். இப் புரட்சி பற்றிய தீர்மானத்தில் மிதவாதிகள் அரசாங்கத்தை ஆதரிக்க முடிவு செய்தனர். சமூக ஜனநாயக வாதிகளைக் கொண்ட தேசிய புரட்சிகர இயக்கம் (MNR) தலைவரான Guillarmo ungo முதலாவது பொதுமக்கள் இராணுவக் கூட்டு அதிகார அமைப்பில் (Junto) இருந்த ஐந்து அங்கத்தவர்களில் ஒருவரானுர். ஆனல் புரட்சிகர தீவிர இடதுசாரிகள் புரட்சியை ஏற்றுக் கொள்ளவில்லை. Popular Leagues என்ற அமைப்பு பல நகரங்களில் கிளர்ச்சியை உருவாக்க முனைந்த போது அவை நசுக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து புரட்சிகர மக்கள் அமைப்பு (BPR), ஒருங்கிணைந்த மக்கள் நடவடிக்கை முன்னணி (FAPU), Popular leagues ஆகிய மூன்று

❋ (19-ம் பக்கத் தொடர்ச்சி)

## முல்லை மண்ணில்...

அகதி முகாம்களில் வாழும் மக்களின் அவலநிலையும், இந்தியாவில் தஞ்சம் புகுந்த மக்களின் இழி நிலையும் நமது கிராமமக்களை தமது நிலங்களை இழக்கமாட்டோம் என்ற உறுதியில் உரம்பெறச் செய்ய வேண்டும். இதற்கு என்ன வழி என்று சிந்திக்க வேண்டும். முல்லைத்தீவு மாவட்ட மக்களைப் பொறுத்தவரையில் பலத்த அபாயங்களுக்கு மத்தியில் வாழ்ந்து பழகியவர்கள். தம்மைத் தாக்க வரும் காட்டு விலங்குகளை வெற்றிகொள்ள வழி தெரிந்தவர்கள். இம்முறைகளை மனித விலங்குகளை வெற்றி கொள்ளத் தக்கதாக மாற்றியமைக்க வேண்டும். காடுகளில் அலட்சியமாக உலாவும் வன்னிமண்ணின் வீரமக்கள் யானைகளையே குழி வைத்து வீழ்த்துபவர்கள். இம்முறை இராணுவ வாகனங்களுக்குக் கூட பொருந்தலாம். நடந்து வரும் இராணுவ விலங்குகளுக்குப் பொறி வைக்கும் வித்தையை நாமா இம்மக்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும்? இப்பிரதேசத்து மக்கள் குறிபார்த்துச் சுடுவதில் பரிச்சயமானவர்கள். Shot gun தயாரிப்பதிலும், கட்டுத்தோட்டா செய்வதிலும் வல்லுனர்கள் இருக்கிருர்கள். இவர்களை ஊக்குவித்து தமது பாதுகாப்பை தாமே உறுதிப்படுத்த இம்மக்கள் முனைய உதவ வேண்டும். காடுகளில் அரண் அமைத்து விஷ அம்பு, வில் போன்றவற்றை பயன்படுத்தல் கூட வெறுங் கையை விட பிரயோசனமானது. இதுபோல பல் வேறு பாதுகாப்பு, எதிர்ப்பு முறைகளை பயன்படுத்த நாம் முனைய வேண்டும். இழந்த நிலங்களை மீட்போம்; இனியும் எதையும் இழக்கோம் என்ற உறுதியில் எல்லா வேறுபாடுகளையும் களைந்து ஒன்றிணைவோம். ❋



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கங்களும் பொதுவான முடிவில் உடன்பட்டன. சீர்திருத்த உறுதி மொழிகளைச் செயற்படுத்துமாறு அரசை தொடர்ச்சியாக வற்புறுத்துவது என்பதே இவ்வுடன்பாடாகும். இவ்வியக்கங்கள் கிராமப்புற தொழிற்சங்கங்களைக் கட்டுப்படுத்தி வந்தன.

1979 ஒக்டோபர் முடிவில் புரட்சிகர மக்கள் அமைப்பு, (BPR) பொருளாதாரநீதி அமைச்சுக்களை முற்றுகையிட்டு அமைச்சர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்தனர். அதன்பின் அவர்கள் கிராமியத் தொழிலாளருக்கு 100% உடனடிச் சம்பள உயர்வினையும், அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைப்பினையும், அரசியற் கைதிகளும், காணாமற் போனஏனைய கைதிகள் பற்றி விசாரணை ஒன்றையும் கோரினர். இதற்கு ஆதரவாக பரபண்டே மக்கள் விடுதலைப் படை தேவாலயங்களை முற்றுகையிட்டதுடன் பல ஆர்ப்பாட்டங்களையும் ஏற்பாடு செய்தது. இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் இரண்டில் பொலிசார் சூட்டில் 100க்கும் மேலானோர் இறந்தனர். ஒக்டோபர் இறுதியில் 300 பேர் பொலிசாரால் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இவ் அரசாங்கத்தில் அமெரிக்க வற்புறுத்தலால் வலது சாரியான Col Garcia பாதுகாப்பு மந்திரியாக நியமிக்கப்பட்டமை மிதவாத அரசாங்க சக்திகளுக்குப் பாதகமாக அமைந்தது. Col Garcia மூன்று படைகளான National Guard, National police, Theasurdy police ஆகியவற்றின் மீது பூரண கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தார். முற்போக்கு எண்ணங்களைக்கொண்ட அதிகாரிகளையுடைய இராணுவத்தைப் போலன்றி இப்படைகள் எதிர்ப்புரட்சித் தன்மை கொண்டவை. ஜெனரல் ரொமெரோ காலத்தில் வலதுசாரி மரணப்படைகளுடன் கைகோர்த்தபடி இயங்கின. இத்தகையதான பல அடக்குமுறை நடவடிக்கைகளினால் பல ஒன்றிணைப்புகள் ஏற்பட்டன. ஒருங்கிணைந்த மக்கள் நடவடிக்கை முன்னணி (FAPU), புரட்சிகர மக்கள் அமைப்பு (BPR), தேசிய ஜனநாயக சங்கம் (UDN), popular leaques போன்

---

❀ (22-ம் பக்கத் தொடர்ச்சி)

# தென்னாசிய சூழ்...

எதிரியிடமிருந்து விடுதலை பெற்றவுடன் எமது சோஷலிச நிர்மாணத் திட்டங்களானது நிதானமாகவும், கவனத்துடனும் மேற்கொள்ளப்படல் வேண்டும். சமூகம் உற்பத்தி செய்த பொருளை சமூகத்திற்கு வழங்கலே சோஷலிச சமூகத்தின் முதல் வேலையாகும். அத்துடன் தனி உற்பத்தியையும், தனி உடமையையும், கூட்டு உற்பத்தி, கூட்டு உடமையாகவும் மாற்றவேண்டும். சமூகம் முழுமைக்கும் வேலை செய்வதன் மூலம் எல்லோரும் வாழ்க்கை சாதனங்களைப் பெற்றால், சமூக கடமை உணர்ச்சி வளர்ந்தே தீரும். சமூக தத்துவம் சரியானது என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டியதில்லை. எனவே சக்திக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கு ஏற்ற ஊதியம் எனும் நியதி அடிப்படையில் மொத்த உபயோகப் பொருட்கள் விநியோகிக்கப்படும். இந்த அடிப்படையில் சோஷலிச நிர்மாண வளர்ச்சிக் கட்டம் 3 வகைப்படும்.

(1) முதலாளித்துவ உற்பத்தி முறையிலிருந்து சோஷலிச உற்பத்தி முறைக்கு மாறல்.

(2) சோஷலிசத்தின் வளர்ச்சிக் கட்டம்.

(3) சோஷலிசத்திலிருந்து கம்யூனிச சமூகத்திற்கு மாறிச் செல்லல்.

தமிழீழப் போராட்டமானது சோஷலிசப் புரட்சியாக சோஷலிசப் பாதையில் முன்னெடுத்துச் செல்லப்படுகையில் கம்யூனிச சமூகமாக மாறும் வரை போராட்டங்கள் நிகழ்ந்த வண்ணமே இருக்கும். தேசிய விடுதலையானது பேரினவாத ஒடுக்குமுறையிலிருந்து விடுபடும்வரை ஆயுதப் போராட்டமாகவே அமையும். பின்னர் தொடரும்போராட்டங்கள் வன்முறையா, அமைதி வழியா என்பது முதலாளித்துவ - பிரபுத்துவ சக்தியே தீர்மானிக்கும். எனவே இன்றைய தமிழீழ அகநிலை, புறநிலைகளின் கணிப்பீட்டின்படி கெரில்லா யுத்தம் மூலம் முன்னெடுக்கப்படும் தொழிலாள வர்க்கத் தலைமையிலான சோஷலிசப் புரட்சியே எல்லாவித கொடுமைகளையும், அனைத்து அடக்குமுறைகளையும், சகலவித ஒடுக்குமுறைகளையும் அழித்து தமிழீழமக்களினது அமைதியான சுகவாழ்வுக்கு வழிசமைக்கும்.

''தாயகம் இன்றேல் வீரமரணம்'' ☐



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றன ஒருங்கிணைந்து தேசியப் புரட்சிகர ஒருங்கிணைப்பு (CRM) என்ற அமைப்பின் கீழ் அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலும், மக்கள் அரசை நிறுவுவதிலும் ஈடுபட்டனர் அதேவேளை:-

1. புரட்சிகர மக்கள் அமைப்புடன் (BPR) இணைந்த பரபண்டே மார்ட்டி மக்கள் விடுதலைப் படை (FPL - FM) உம்

2. Popular Leaques உடன் இணைந்த புரட்சிகர மக்கள் இராணுவமும் (ERP)

3. ஒருங்கிணைந்த மக்கள் நடவடிக்கை முன்னணியுடன் (FAPU) இணைந்த தேசிய எதிர்ப்புப் படையும் (FARN)

4. தேசிய ஜனநாயக சங்கத்துடன் இணைந்த கம்யூனிஸ்ட் கட்சியும்

ஆக நான்கு செரில்லா இயக்கங்களும் இணைந்து ஆயுத நடவடிக்கைகளில் இறங்கின.

1980 ஜனவரியில் இவர்கள் நடத்திய 1,50 000 மக்கள் கொண்ட ஊர்வலத்தில் பொலிசார் மேற்கொண்ட இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகத்தினுல் 22 பேர் இறந்தனர். தொடர்ந்து அரசாங்கம் மேற்கொண்ட நிலச்சீர்திருத்தத்தினுல் 6000 விவசாயிகள் நிலமிழந்து அகதிகளாக தேவாலயங்களில் வந்து குடியேறினர். இத்தகைய அநியாயங்களால் கொதிப்படைந்திருந்த 63 வயதினரான அதி மேற்றிராணியார் ஆர்ணவோ ரொமேரோ 24 பெப்ரவரி 1980-ல் தேவாலயம் ஒன்றில் திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுத்துக் கொண்டிருந்த போது வலதுசாரி ஒருவனின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானுர். இதனைத்தொடர்ந்து புரட்சிகர அமைப்புக்களிடையே மேலும் ஐக்கியம் ஏற்பட்டு இறுதியாக ஐந்து அரசியல் இராணுவ அமைப்புக்களை உள்ளடக்கிய புரட்சிகர ஜனநாயக முன்னணி (F D R) பரபண்டே மார்ட்டி தேசிய விடுதலை முன்னணி (FMLN) உடன் தற்காலிகமாக கூட்டுச்சேர்ந்து ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

(23-ம் பக்கம் தொடர்ச்சி)

## புரட்சியில் . . .

வாளிகள் தகவல் கொடுத்ததால் கைது செய்யப்பட்டார் கொல்லப்பட்டார். அப்போது அவருக்கு 30 வயது கூட நிறையவில்லை. இவர் தன் காதலி தாத்தூருக்கு எழுதிய கடிதத்தின் முக்கிய பகுதி:-

... ...நீ எப்பொழுதும் போல துணிவும், உறுதியும் கொண்டிரு! உன் இளமையும் முகைய விழும் வாழ்க்கையையும், உச்சத்திலிருக்கும் உலகப் போராட்டத்தையும் எண்ணிப்பார். நினைவு வைத்துக்கொள்; நான் இல்லாவிட்டால் உலகம் வெறுமையாகி விடாது. உறுதியாய் இரு! பெருமிதத்தோடு தலை நிமிர்ந்து ஒளி வீசும் வருங்காலத்தை நோக்கி நட! நீ என்னை உளமாரக் காதலித்தால் ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடாதே. கொடிய பகைவர்கள் நகையாட இடம் தராதே. உன் எண்ணங்கள் யாவற்றுலும் நீ என்னைக் காதலித்தால் விழிகளைத் தாழ்த்தாதே. பகைவர்களில் எவனும் உன் பலவீனத்தை கண்டு கொள்ள விடாதே. மாறாக உன் விழிகளின் மின்வெட்டைக் கண்டு ஒவ்வொருவனும் குற்றவாளி போல இருப்புக்கொள்ளாமல் தவிக்கட்டும்

நான் மன்னிப்பு கோரலாம் என்று வழக்குரைஞர் சொன்னுர். என் அருமைத் தாத்தூ! நானு மன்னிப்புக் கோருவேன்? ஒருபோதும் மாட்டேன். அப்படிச் செய்தால் நான் உல்லுபீ என்று ஒப்புக் கொள்ளவே மாட்டாய்.

ஆகவே என் அன்பே! முன்னே பார்வையை செலுத்து. நீ உளமார நேசிக்கும் நம் மக்களின் நன்மைக்காக வாழ்ந்திரு. அசட்டுத்தனம் எதுவும் செய்யாதே. நல்லது விடை கொடு. தொலைவிலிருந்து நெஞ்சாரப் புல்லி முத்தமிடுகிறேன்.

விரும்பிய பாதையில் நடை போட்டே உள்ளம்
விழைந்திடும் வகையினில் வாழ்ந்திடல் இங்கே
அரும் பெரும் சாதனை, ஆயினும் அதனில்
ஆதாயம் கிட்டுதல் அரிதினும் அரிதே
அருமைத் தாத்தூ நான் தெரிந்தெடுத்த
பாதையை நீயும் சற்று விரும்பேன்!

உன்
உல்லுபீ

நன்றி:- புரட்சியில் இளைஞர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டோரில் காணப்பட்ட இந்நிலமைகளானது புரட்சிகர இயக்கங்கள் உத்வேகம் பெறவும், வர்க்கப் போராட்டம் கூர்மையடையவும் காரணமாயிற்று. ஏனைய நாடுகளைப் போலன்றி சல்வடோரிய வர்க்கப் போராட்டமானது சற்று வித்தியாசமானது. ஏனெனில் இங்கு தொழிலாளர், விவசாயிகள் மட்டும் முதலாளித்துவத்தால் சுரண்டப்படவில்லை. மத்தியதர வர்க்கமும் சுரண்டப்பட்டது. இதனால் மத்தியதர வர்க்க பொதுமக்களின் போராட்ட வெறி கூட தெளிவான வேகத்துடன் சென்றது, மத்திய தர வர்க்கத்தின் இத்தகைய போராட்டத்தை 1960ன் பிற்பகுதியிலும், 70 களின் முற்பகுதியிலும் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தின் மூலம் கண்டு கொள்ளலாம். இக்கால கட்டத்தில் வர்க்கப் போராட்டம் தெளிவான வடிவைப் பெற அது இராணுவ பலம் கொண்டு நசுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

1960 களின் பிற்பகுதியில் ஏற்பட்ட பெரும் பிரச்சனைகளுக்கு ஏகாதிபத்தியமும், உலக முதலாளித்துவமும் நல்லதோர் தீர்வை வழங்கவில்லை. இதனால் சல்வடோரின் பொருளாதார அபிவிருத்தியானது இழி நிலைக்குத் தள்ளப்பட்டது. பொருளாதார மாற்ற நிலை காரணமாக நிலங்களுக்கும் சொந்தமான முதலாளித்துவக் குடும்பங்கள் பல்வேறு வழிகளில் அதிகூடிய இலாபத்தைப் பெற முற்பட்டன. கட்டிட நிர்மாணத்துறைகள், உல்லாசப் பயணத்துறை போன்றவற்றில் இவர்களின் கவனம் சென்றது. இத்தகைய திடீர்த் திருப்பத்தினால் சல்வடோரில் பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைச்செலவு உயர்வு போன்ற பல பிரச்சனைகள் எழுந்தன. இப்பிரச்சனைகள் சுரண்டப்பட்ட மக்கள் மத்தியில் மிக ஆழமாகப் பதிந்தன. இதனால் வர்க்கப் போராட்டத்தின் உண்மையான போக்கில் மக்கள் விடுதலைக் கொள்கை என்பது செல்வாக்குச் செலுத்தியது. அரசியல் ரீதியாக இதற்கென உருவாக்கப்பட்ட இராணுவ அமைப்பு தன் நடவடிக்கைகளைத் தொடங்கியவுடன் மக்கள் விடுதலைப் போராட்டமானது ஒரு இலக்கை நோக்கி வேகமாக முன்னேறி புதியதோர் உத்வேகத்தைப் பெற்றது. இதனை 1972 ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்றது எடுத்துக் கூறுகின்றது. விடுதலைப் போராட்ட முன்னெடுப்புகள் உச்ச நிலையை அடைந்து விட்டன என்பதை எதிர்க்கட்சிகள் கூட தம் வெற்றியைக் காப்பாற்றவும், ஜனாதிபதியை ஏற்பதற்கும் முடியாமல் இருந்தமை எடுத்துக் காட்டுகின்றது.

1974 இல் விடுதலைப் போராட்டத்தின் வலிமையை நன்கு உணர்ந்து கொண்ட முதலாளித்துவ சக்தியானது மக்களைத் திசை திருப்பும் முயற்சிகளில் ஈடுபட்டது. எனினும் இம்மாயவலையில் சிக்காது விடுதலைப் போராட்டமானது தொடர்ந்து முன்னேறி தகுந்ததோர் நிலைப்பாட்டை இக்காலப்பகுதியில் பெற்றது. ஆளும் கட்சியானது ஒருதந்திரத்தை இக்காலப் பகுதியில் நடைமுறைப்படுத்த எண்ணியது. அதாவது சிறு முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களையும், மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களையும் வறுமைப்பட்ட விவசாய குடும்பங்களில் இருந்து உதவியையும் இராணுவத்திற்கு பெற்றுக் கொடுக்க முயற்சித்தது. ஆனால் இத்திட்டம் பலிக்கவில்லை. மக்கள் விடுதலைப் போராட்டத்தின் தெளிவையும், உறுதியான போக்கையும் இது எடுத்துக் காட்டுகிறது. இத்திட்டத்தை அமுலாக்கும் போது பல்கலைக்கழகங்கள், தொழில் நிறுவனங்கள் என்பன இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டன. தொழிற்சங்கங்களின் தலைவர்களைக் கொலை செய்தல், வேலை நிறுத்தங்களை தடுத்தல், விவசாயத் தொழிலாளர்களைக் கொலைசெய்தல், பொய்யான வதந்திகளைக் கிழப்பி மக்கள் மத்தியில் பிரச்சனையைக் கிளப்பல் போன்ற காரியங்களில் ஆட்சியாளர்கள் ஈடுபடத் தொடங்க, பல புரட்சிகர அமைப்புகள் வலிமை பெறவும், ஒருங்கிணையவும் ஆரம்பித்தன. ஒருங்கிணைந்த இவ் இயக்கங்களின் போராட்டமானது உத்வேகத்தினைக் கொண்டிருப்பதனால் எல்சல்வடோர் மத்திய அமெரிக்காவின் கொந்தளிக்கும் ஓர் பிரதேசமாக மாறியது.

—தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கற்பு ! —— கற்பிழப்பு !! —— கற்பழிப்பு !!!

## சில குறிப்புக்கள்

— அமுதன்

எங்கெல்லாம் ஒடுக்கப்படுகின்ற மக்கள், ஒடுக்குகின்ற அரசிற்கெதிராகப் போராடுகின்றனரோ அங்கெல்லாம் அரச பயங்கரவாதம் உச்சக் கட்டம் வரை கட்டவிழ்ந்துவிடப்படுவது வரலாற்று உண்மை. அந்த வகையில், தமிழீழப் போராட்டம் கூர்மையடைந்து வருகின்ற இன்றைய தருணத்தில் அரச பயங்கரவாதம் மேலுமொரு புதிய பரிணாமத்தைப் பெற்றுள்ளது. கிராமத்தைச் சுற்றி வளைத்து 'ஆயுதம் தரித்த இளைஞர்களைத் தேடுதல்' என்ற பெயரில் இராணுவத்தினரால் பெண்கள் கற்பழிக்கப்படுவதும், மான பங்கப்படுத்தப்படுவதும் நடைபெற்று வருகிறது. இச் சம்பவங்கள் எமது வரலாற்றுப் போக்கில் எதிர்பார்க்கப்படாத ஒன்றல்ல. ஏனைய உலக நாடுகளின் விடுதலைப் போராட்ட வரலாறுகள் இதற்கான சான்றுகளை எமக்கு நிறையவே தருகின்றது. பங்களாதேஷில் பல்லாயிரக் கணக்கான பெண்கள் [redacted] இராணுவத்தால் கற்பழிக்கப்பட்டதும், ஒரு பெண்ணே பல ஆண்களின் பலாத்காரத்திற்கு உட்பட்டதும் எமக்கு முன் சம்பவங்களாகத் திரண்டுள்ளன. திருநெல்வேலியில் ஆரம்பமான பெண்களின் மீதான பலாத்காரம், வன்செயல் என்பன அச்சுவேலி, மன்னார், நெடுங்கேணி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலும் தொடர்ந்து இடம் பெற்றிருப்பது அவதானிக்கத்தக்கது. பெண்கள் மீது இராணுவத்தினர் மேற்கொள்ளும் ''கற்பழிப்பு'' என்ற வன்செயல் நடவடிக்கை சமூகத்தில் பல்வேறு பிரச்சனைகளையும் ஆராயத் தூண்டுவதாகவும், அது பற்றிய புதிய அணுகு முறைகளை அவாவி நிற்பதாகவும் காணப்படுகின்றது.

தமிழர்களின் பாரம்பரியத்தில் குடும்பம் என்பது பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய ஒரு புனிதமான நிறுவனமாகும். இதில் கன்னிமை, காதல், ஆண் - பெண் உறவு (அது எவ்வகையானதாயினும் சரி) பாலியல் அபிலாசை, திருமணம், குடும்ப வாழ்வு, தாய்மை அடைதல் ஆகிய யாவும் ஒரே நாரினால் இணைக்கப்பட்டுள்ளன. இங்கு 'கற்பு' என்பது எல்லாக்கட்டங்களிலும் பேணப்பட வேண்டிய ஒரு ஒழுக்க நெறியாக முன் வைக்கப்பட்டுள்ளது. கற்பு என்பது 'ஒருதாரம் அல்லது ஒன்றே தாரம்' என்ற ஒரு அர்த்தத்தை கொண்டதாகும். இந்த ஒழுக்கமுறை கருத்து ரீதியாக ஆண்களும் பெண்களும் கடைப்பிடிக்க வேண்டிய நெறியாகும். ஆயினும் பெண்களே இதனைப் பேண வேண்டியவர்களாக நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். இதனைப் பேணாத ஆண்கள் சமூகத்தில் பெற்றுக்கொள்ளும் அந்தஸ்து எந்தவிதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. பெண்கள் அறியாப்பருவத்தில் செய்து கொண்ட சிறு ஒழுக்க வழுகல் கூட, அவர்களின் வாழ் நாள் பூராகவும், நீங்காத மறுவாகச் சுட்டிக்காட்டப்படுவதுண்டு. ஆண்கள் 'சேறுகண்ட இடத்தில் மிதித்து தண்ணீர்கண்ட இடத்தில் கழுவுவார்கள்' எனக் கூறி அவர்களின் நடவடிக்கைகளை அங்கீகரிக்கும் சமூகம்பெண்களை இவ்வாறு நடத்துவது. ஒரு பாரபட்சமான தன்மையையே காட்டி நிற்கின்றது.

ஒருபெண் திருமணத்தின் முன்பு சட்ட ரீதியாகவோ அன்றிச் சம்பிரதாயரீதியாகவோ அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமலும், திருமணத்தின் பின் குறிப்பிட்ட ஒப்பந்தகாரனைத்தவிர பிற ஆடவருடனும் உறவுகொள்வது 'கற்பு' என்ற ஒழுக்கத்திற்குப் பிழைத்ததாகக் கொள்ளப்படும். இங்குகற்பு என்பது உடலியல் உறவுடன் மட்டுமே சம்பந்தப்பட்டதாக அமைவதை அவதானிக்கலாம். [ஒருகாலத்தில் 'கற்பு' என்பது மனதால் எவரையாவது நினைத்தபோதிலேயே அழிந்து விடக் கூடிய ஒன்றாக இருந்தது குறிப்பிடத்தக்கது.] வழமையாக இத்தகைய ஒரு நிலைக்கு உட்பட்டபெண் கற்பிழந்தவள் எனப்படுவாள். ஆயினும் 'கற்பிழக்கும்' அதேவேளையில் தாய்மை அடையும்தன்மையையும் பெற்றவர்கள் இத்தகைய பாதிப்புக்கு அதிகம் உள்ளாகின்றனர். ஏனெனில் அவர்களே சமூகத்தின் கண்களுக்குத் துல்லியமாகத் தெரிகின்றனர்.

குறிப்பிட்ட ஒரு ஆணும், பெண்ணும் பரஸ்பர விருப்பத்தின் பேரில் சமூக அங்கீகாரம் பெறாத போது வைத்துக்கொள்ளும் உறவு இரகசியமாக வைத்திருக்கும் பட்சத்தில் எந்தவித



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரச்சனையும் ஏற்படுவதில்லை. ஆனால் அது பகிரங்கமாக்கப்படும் போது ஆண்கள் நிரபராதிகள் என விடுதலை செய்யப்படுகின்றனர். பெண்கள் குற்றவாளிகளாகக் கற்பிழந்தவர்கள் எனப் பழி சூட்டப்படுகின்றனர். அது மட்டுமன்றி பெண்களின் உடன்பாடோ, அனுமதியோ இல்லாமல் பலாத்கார முறையில் ஆண்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாலும் அதிகம் பாதிக்கப்படுகின்றவர்கள் பெண்களாகவே உள்ளனர். இவர்களும் கற்பிழந்தவர்கள் பெறுகின்ற அந்தஸ்தையே சமூகத்தில் பெற்றுக்கொள்கின்றார்கள்.

தமிழர் பாரம்பரியத்தில் கற்பு என்ற ஒழுக்க நெறியைப் பேணிய பெண்கள் அசாதாரணமானவர்கள் எனக் கருதப்பட்டனர். அவர்கள் தெய்வீகத்தன்மை கொண்டவர்களாகவும், 'பத்தினி' 'பதிவிரதை' என்ற விருதுகளைப் பெற்றவர்களாகவும் வர்ணிக்கப்பட்டனர். அவர்களின் வேண்டுகோளின்படி 'மழை பெய்யும்' என்பது திருவள்ளுவரின் வாதம். ஆனால் இது ஓர் இலட்சியவாதத் தன்மை கொண்ட கருத்து[illegible] என்பதில் சந்தேகமில்லை.

பெரும்பாலான சமூகவியல், வரலாற்று ஆய்வாளர்கள் திருமணஉறவு முறை எப்போதுமே ஓரேமாதிரியானதாக இருக்கவில்லை என்பதை வெளிக்காட்டியுள்ளனர். காலத்திற்குக் காலம் பல்வேறு திருமணவடிவங்கள் நிலவியன என்பதை 'ராகுல சாங்கிருத்தியாயனின் 'வொல்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலும் ஏங்கெல்சின 'குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்ற நூலும் தெளிவாக விளக்குகின்றன.

விஞ்ஞான ரீதியாகப் பார்க்கும்போது 'ஒரு தார மணம்' என்ற திருமணவடிவம் உன்னதமான ஓர் வடிவமாக அமைந்து விட்டதை யாவரும் ஏற்றுக் கொள்வர். ஆனால் அதன் உண்மைத் தன்மையை 'கற்பு' என்ற போலிக் கட்டுப்பட்டிற்குள் அடைத்துக் கொள்வது மூடத்தனமான ஒரு நடவடிக்கையாகவே அமையும். உதாரணமாக ஒருதார திருமண முறைமைக்கு தமிழர் பேசும் கற்பு முறைக்கும் அதிக இடைவெளி இருப்பது கண்கூடாகும். 'கற்பு' என்பது ஒருவரை ஒருவர் காதலிப்பதைக் குறிப்பதாயின் பெரும்பாலானவர்கள் கற்பிழந்தவர்கள் ஆவார். கற்பு என்பது உடலியல் உறவைக் குறிப்பதாகக் கொள்ளின் பொதுசன போக்குவரத்துச் சாதனங்களில் பிரயாணம் செய்வோர் எல்லோருமே அரைவாசி கற்பிழந்தவர்கள் ஆகிவிடுவார்கள்.

நமது சமூகத்தில் பெண்கள் தாமாகவே ஆண் ஆதிக்கத்திற்கு அடங்கிவிடுவதை காண்கிறோம். நமது பெண்கள் பெரும்பான்மையாக வாசிக்கும் கதைகளும், பார்க்கும்சினிமாவும் இதையே பெண்களிடம்ஊட்டிவிடுகின்றன. ஆண்களால் பலாத்காரம் பிரயோகிக்கப்பட்ட பெண்கள் தற்கொலை செய்யாமல் விடுவது பெரிய பாவமாகவும், அருவருப்பாகவும் காட்டப்படுகின்றது. முழுக்க, முழுக்க ஆண்களால்தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும், நியாயப்படுத்தவும் வேண்டி தயாரிக்கப்பட்ட வேதங்கள் இதற்கு துணை நிற்கின்றன. ஆண்களிற்கு இராணுவத்தினால் வழங்கப்படும் உடல்இம்சை போன்ற ஒரு செய்கையே பெண்கள் மீது இராணுவத்தினர் மேற்கொள்ளும் பலாத்காரமும் என்பதை பெண்களும், ஆண்களும் முழுமையாக உணர வேண்டும். இதில் எதற்காக? யார் வெட்கப்பட வேண்டும்? ஏதோ இழக்கக் கூடாததை இழந்ததுபோல ஏன் தலைகுனிந்து நிற்க வேண்டும்?

எனவே கற்பு, கற்பிழப்பு, கற்பழிப்பு என்ற விடயங்களை எவ்வாறு அணுக வேண்டும் என்பது பற்றி விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

நிலமானிய முறையின் உன்னதமான காலகட்டத்தில் ஒழுங்குப்படுத்தப்பட்ட ஒரு சமூக அமைப்பு முறையின் சிதைவடைந்த நிலையே நாம் இன்று தமிழ்ப்பகுதிகளில் காணும் அமைப்பு முறை ஆகும். அங்கு நிலம் பெரும் சொத்தாக மதிக்கப்பட்டது. அது நிலையான சொத்தாகவும் இருந்தது. அதனைத் தொடர்ந்து தமது வாரிசுகளுக்கு வழங்க விரும்பிய ஆண்ஆதிக்கக்காரர் பெண்களையும் தமது உடமையாக ஆக்கினர். அவர்களுக்கு உரிய பாதுகாப்பு, பொருளாதார வளம் என்பவற்றை அவர்கள் நிறைவாக வழங்கினர். பெண்கள் பொது உற்பத்தியில் ஈடுபடாது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைப் பதப்படுத்துவதிலும், தமது வழித்தோன்றல்களை உற்பத்தி செய்வதிலும் காலம் கழித்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அவர்கள் பத்தில் இருந்து பதினாறு வரையிலான குழந்தைகளைப் பெறவும் முடிந்தவர்களாக இருந்தனர். பிள்ளைகளும் செல்வங்களாக மதிக்கப்பட்டன. அந்த ஒழுங்கு முறை அவர்களுக்கு திருப்தியானதாகவும் இருந்திருக்கும்.

ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. பெண்கள் பொது உற்பத்தி வேலைகளில் இறங்கிவிட்டனர். ஆண்கள் பொருளாதார வளத்தை மட்டுமல்ல, பெண்களுக்கு கொடுக்க வேண்டிய பாதுகாப்பையும் கொடுக்க முடியாத நிலையில் உள்ளனர். முனைப்படைந்துள்ள தேசிய விடுதலைப் போராட்டம் அவர்களின் கடமைகளையும், பொறுப்புக்களையும் அதிகரிக்கச் செய்துள்ளதுடன், சவால்களை ஏற்றுப் பிரதிபலிக்க வேண்டியவர்களாகவும் அவர்களை மாற்றிவிட்டது.

இந்த நிலை மாறும் கட்டத்தில் வாழுகின்ற நாம் காலம்கடந்த கோட்பாடுகளையும், கட்டுப்பாடுகளையும் களைந்தெறிய முடியாது இருப்பது வருத்தத்திற்குரியதாகும். உதாரணமாக பெண்கள் மீது ஆயுத பலத்தின் அடிப்படையில் பலாத்காரம் பாவிக்கப்படும் போது பாதிக்கப்பட்ட பெண்களை 'கற்பிழந்தவள்' எனப் பழிசூட்டுவது மிகவும் பாதகமான செயலாகும். அதனை யாராவது இழிவான செயல் எனக் கருதுவோம் ஆயின் அத்தகைய ஒரு செயல் அப்பாவி மங்கையர் மீது ஏற்படாது பாதுகாக்க முடியாத இழிவான நிலையில் நாம் இருக்கின்றோம் என்பதையும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

கற்பு என்ற ஒழுங்கு முறை போலி எனக் கருதப்படும் அதே வேளையில எல்லோரும் எல்லா மாதிரியும் நடந்து கொள்ளலாம் என்ற தவறான விளக்கம் ஏற்பட்டுவிடக் கூடாது. உதாரணமாக கற்பு இல்லை என்பது விபச்சாரத்தை ஆதரிப்பதாகவோ, எந்த ஆண்களும் பெண்களுடன் தவறாக நடந்து கொள்ளலாம் என்பதைக் குறிப்பதாகவோ நேர்ந்துவிடக் கூடாது. ✻

''சன்டினிஸ்ட் தேசிய விடுதலை இயக்கத் தோழர்களிடையே ஆண் ஆதிக்கப் பிரச்சனை வெளிப்படையாக இருந்தது. பெண்கள் வீட்டு வேலைக்கு மட்டுமே தகுதி பெற்றவர்கள் என்ற எண்ணம் அவர்களிடையே நிலவியது. செய்திகள் தாங்கி தூது செல்வதற்கு மேலாக எதுவுமே எம்மால் முடியாதென அவர்கள் நினைத்தார்கள். இது பற்றி எல்லாம் நிறைய விவாதிக்கப்பட்டது. பாலியல் பிரச்சனைகள் பற்றி சில தோழர்கள் வெளிப்படையாகவே பேசினார்கள். ஏனையோர் மௌனம் சாதித்தனர். மலைப்பிரதேசப் போராட்டத்திற்கு பெண்கள் தகுதியற்றவர்கள்; பாலுறவுக்கு மட்டுமே அவர்கள் சிறந்தவர்கள்; அவர்கள் பிரச்சனைகளை—அதாவது ஆண், பெண் உறவுப் பிரச்சனைகளை உருவாக்கிய வண்ணம் இருப்பார்கள் என்று சில ஆண் தோழர்கள் வாதாடினர். ஆனால், அதே வேளை பெண்கள் பிரச்சனையில் புரட்சிகரப் பார்வை கொண்ட ஆண்களும் இருக்கத்தான் செய்தனர். எமது போராட்டமோ ஒரு நீண்ட போராட்டமாக இருந்தது. விவாதங்கள் வாயிலாகவும், பெண் தோழியர் போர் அரங்கில் தமது திறனாற்றலையும், வீரத்தையும் நிரூபித்துக் காட்டியதாலும் இப் போராட்டத்தில் நாம் வெற்றி பெறமுடிந்தது''

——நிக்கரகுவாவின் சன்டினிஸ்ட் தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஒரு பெண் கெரில்லா (இவர் நிக்கரகுவாவின் தலைநகரைக் கைப்பற்றி இறுதித் தாக்குதலில் தலைமை தாங்கியவர்களில் ஒருவர்).

www.tamilarangam.net

# PRINTHA TRAVEL SERVICES

## பிரிந்தா ரவல் சேவிஸ்

(*AIR AGENTS*)

☒ Berlin

குறைந்த செலவில் கூடிய விரைவில் *Berlin* செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கு,

☒ லண்டன், மற்றும் சகல நாடுகளுக்கான விமான டிக்கட்டுக்களுக்கும்,

☒ பாஸ்போட், விசா, பிரயாணிகள் காசோலைகளுக்கும்.

☒ கலர் புகைப்படச் சுருள்களை *Processing & Development* செய்துகொள்ளவும்.

தொகையானப் படச்சுருள்களுக்கு விஷேசகழிவு கொடுக்கப்படும்.)

**மேற்குறிப்பிட்ட விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.**

பிரிந்தா ரவல் சேவிஸ்
61, 62, ஆஸ்பத்திரி வீதி,
சத்திரம் சந்தி,
யாழ்ப்பாணம்.

அசோகா லொஜ்
169, செட்டியார் தெரு,
கொழும்பு-11

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சுதந்திரம் எமது பிறப்புரிமை"

- நண்பரின் அன்பளிப்பு -

மாணவர்களின் தேவைகளை
ஒரே இடத்தில் பூர்த்தி செய்வதற்கு
நாடுங்கள்

ஸ்ரீலங்கா புத்தகசாலை
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்